கண்ணன்

74

குழந்தைகளின் பத்திரிகை

474
2.5

...ICE OF THE REGISTRAR OF BOOKS ...
... APR 1956

2

செய்திகள்

எஸ். எஸ். எல். ஸி. செலக்ஷன் முறை

எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்குச் செல்லும் மாணவர்களை 'வடி கட்டி' அனுப்புவது கூடாது என்று சிலர் கூறுகிறார்கள். சர்க்கார் அந்த முறையை அதற்காகக் கைவிடப்போவதில்லை என்று கல்வி மந்திரி தெரிவித்தார். வடிகட்டாமல் எல்லா மாணவர்களையும் அனுப்பிய வருஷங்களைவிட வடிகட்டி அனுப்பின வருஷங்களில் அதிக மாணவர்கள் தேறி இருக்கிறார்கள் என்று அவர் கூறினார். இதை எண்ணியே பள்ளிகளில் மீண்டும் செலக்ஷன் முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கட்டுப்பாடும், நல்ல சூழ்நிலையும் ஏற்பட இந்த முறை மிகவும் அவசியம் என்று சர்க்கார் கருதுகிறார்கள்.

கடலின் கீழ் புகைப்படம்

கடலுக்கு அடியிலுள்ள பொருள்களைத் தத்ரூபமாகப் படம் பிடிக்க முடியுமாம். நாம் நினைக்கிறபடி கடலினுள்ளே இருட்டாக இருப்பதில்லை. அங்கே, தண்ணீரே நாலுபுறமும் ஒளியைப் பரவச் செய்கிறது. இந்தப் படப் பிடிப்புக் கலை வளர்ச்சியைக்கொண்டு கடலின் கீழ் புதைந்து கிடக்கும் சரித்திரச் சின்னங்கள் பலவற்றைப் படம் பிடித்து வெளிப்படுத்த முடியுமாம்.

செயற்கைச் சந்திரன்

அடுத்த இரண்டு ஆண்டுகளில் பூமிக்கு மேலே 300 மைல் உயரத்தில் ஒரு செயற்கைச் சந்திரனைச் சுற்றி வரும்படி விஞ்ஞானிகள் செய்யப் போகிறார்கள். இந்த முயற்சியில் பல நாடுகள் ஒன்று சேர்ந்து பங்கு கொண்டிருக்கின்றனர். இந்தச் சந்திரன் ஓர் அயன வீதியில் மணிக்கு 18,000 மைல் சுற்ற வேண்டுமாம். இந்த நூற்றாண்டு முடிகிற சமயத்தில் உண்மைச் சந்திரலோகத்துக்குப் பிரயாணம் செய்வது சாத்தியப்படலாம் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். அது மட்டும் அல்ல; கிட்ட இருக்கும் வேறு இரண்டு கிரகங்களுக்கும்கூடச் செல்வது சாத்தியப்படுமாம்.

டெஸிமல் நாணயம்

இப்போதுள்ள ரூபாய், அணா, தம்படி கணக்கு முறையைவிட டெஸிமல் முறை எளிமையானது. சுலபமாகக் கணக்கிட்டு விடலாம். கூட்டுவது, பெருக்குவது, வகுப்பது எல்லாமே டெஸிமல் முறையில் எளிது. உதாரணமாக, 81 ரூபாய் 12 அணாவில் 10 சதவிகிதம் எவ்வளவு என்றால் ரூபாயை அணாவாக மாற்றி, அதைப் பத்தால் வகுத்து, வகுத்து வந்ததை மறுபடியும் ரூபாய் அணாவாகச் செய்தால்தான் விடை வரும். ஆனால் அதையே டெஸிமல் முறையில் அமைத்து 81.75 ரூபாயில் பத்து சதவிகிதம் எவ்வளவு என்றால் சுலபமாக விடை சொல்லிவிடலாம். ஒரே ஒரு டெஸிமல் ஸ்தானத்தைத் தள்ளிவிட வேண்டியதுதான். 8.175 என்று வாயாலேயே விடை சொல்லிவிடலாம். கூட்டலும் சுலபந்தான். இந்த முறை விரைவிலேயே நம் நாட்டில் பழக்கத்துக்கு வரப்போகிறது. புதிய நாணய முறையில் ரூபாயை 100 சதக் கூறுகப் பிரித்துவிடுவார்கள். இந்தப் புது வகையில் 50, 25, 10, 5, 2, 1 என்று பிரிவுகள் இருக்கும். இவற்றில் முதல் இரண்டு பிரிவுகளும் அரை ரூபாய், கால் ரூபாய் நாணயங்களுக்கு ஈடாகும். மற்றவைபற்றிக் கொஞ்ச நாள் நமக்குக் குழப்பம் இருக்கும். ஆனால் விரைவிலே சரியாகிவிடும்.

குழந்தைகள் பிலிம் விழா

இரண்டாவது (குழந்தைகள்) பிலிம் விழா மார்ச்சு மாதம் 4-ஆம் தேதி சென்னையில் கொண்டாடப்பட்டது. சில தியேட்டர்களில் குழந்தைகளுக்கான பல தேசத்துப் படங்களை 4 அணா கட்டணத்தில் காட்டினார்கள்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 6

15 - 3 - '56

குழந்தைகளே!	பக்கம்	2
இதோ ஒரு புத்தகம்!	..	3
ரேடியோ விமரிசனம்	..	4
கஞ்சன்	..	5
மஞ்சள் பங்களா	..	7
வருஷப் பிறப்பு ரிலீஸ்	..	13
ராஜுவின் தாயார்	..	17
வழி பிறந்தது	..	21
மந்திரி மணிவண்ணன்	..	25
உனக்குத் தெரியுமா?	..	28
ஸி. ஐ. டி. சிங்காரம்	..	29
அரிசில்கிழார்	..	34
புலிக்குட்டி	..	37
கவியரங்கம்	..	40

அட்டைப் படம்-
(போட்டோ) சங்கர்

செய்திகள் - 2 - அட்டை.
பேனா நண்பர்கள் - 3 - அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

அருமையான சம்பவம்

அன்று காலை மணி 9½. நேரமாகி விடப் போகிறது என்று எண்ணி, பள்ளிக்கு விரைந்து சென்றேன்.

''வேலா! இன்று பள்ளிக்கூடம் கிடையாது. விடுமுறை; அப்படியே திரும்பு. இல்லத்திற்குப் போகலாம்'' என்றான் நண்பன்.

''இன்று திங்கள்கிழமைதானே! விசேஷ நாளுமல்லவே, எதனால் விடுமுறை?''

''அதைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது. பள்ளியின் முகப்பிலே, 'இன்று விடுமுறை' என்ற பலகை மாட்டியிருக்கிறது. அதைப் பார்த்துவிட்டுச் சில மாணவர்கள் வந்த வழியே திரும்பிவிட்டார்கள். நானும் வந்துவிட்டேன்.''

''எதற்கும் நானும் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்'' என்று விரைந்தேன். அவன் சென்றுவிட்டான்.

பள்ளிக்கூடத்தின் வாசலிலே மாணவர்கள் குழாம் சூழ்ந்து கொண்டிருந்தது. நானும் நெருங்கிவிட்டேன்; போர்டைப் பார்த்தேன். பிறகு, அங்குள்ள மாணவர்களை விசாரித்தேன். எல்லோரும் தெரியாது என்று தலை அசைத்துவிட்டார்கள்.

இந்தச் சமயத்தில் தலைமை ஆசிரியர் அங்கே வரவே, எல்லா மாணவர்களும் அவரைச் சுற்றிக் கொண்டு காரணம் கேட்டார்கள்.

ஹெட்மாஸ்டர் முகம் கோபத்தால் சிவந்தது. ''யார் இந்தப் 'போர்'டை இங்கே மாட்டியது?'' என்று கர்ஜித்தார்.

எதிர்த்த கடைக் கண்ணன் ஓடி வந்தான். ''இப்பத்தான் இந்தப் பலகைக்குப் 'பெயிண்ட்' அடித்தேன். ஈரம் உலருவதற்கு வேண்டிய வெயில் இங்கே அடிப்பதால் இங்கே மாட்டினேன். மன்னிக்கவும்'' என்று சொல்லிக்கொண்டே பதிலை எதிர்பாராமல் அவசரமாக அதை அவன் எடுத்துச் சென்றான்.

தலைமை ஆசிரியருக்கு என்ன சொல்லுவது என்றே புரியவில்லை!

—சங்கை மா. கணபதி.

குழந்தைகளே!

இந்த இதழ் வெளிவரப் போகும் நாளை நீங்கள் எவ்வளவோ ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

சென்ற இதழ் வெளியானதும் எனக்கு வரும் தபால்கள் திடீரென அதிகமாயின. முதல் நாள் இதைப் பார்த்ததும் எனக்கே ஆச்சரியமாக இருந்தது. தபால்களைப் படித்துப் பார்த்தபிறகுதான் விஷயம் புரிந்தது. புதிய சித்திரக்கதை வரப் போவதைக் குறித்துப் பல குழந்தைகள் தங்கள் பாராட்டையும் மகிழ்ச்சியையும் முன்கூட்டித் தெரிவித் திருந்தார்கள்.

'புலிக்குட்டி' நமது தமிழ்நாட்டுச் சரித்திரத்தை அடிப்படை யாகக் கொண்ட அற்புதமான கதை. வீரமும் சாகஸமும் நிறைந்த இணை யில்லாக் கதை. திகைப்பும் வியப்பும் ஊட்டுகிற சம்பவங்கள் கொண்ட சுவாரஸ்யமான கதை. வர்மம் பாராட்டும் பழுவூர் நாக்கன் என்ற வாள் வீரன் நாட்டிலேயே இணையிலா வீரனாக ஒருவனை ஆக்குகிறான். அவனே புலிக்குட்டி. புலிக்குட்டியின் பெயரைக் கேட்டாலே புவனம் கலங்கு கிறது. அவன் வாள் வலிக்கு அஞ்சாத வீரனே இல்லை. அக்கிரம வழிகளில் பொருள் சேர்த்த அத்தனை பேரும் அவன் பெயரைக் கேட் டாலே கதி கலங்குகிறார்கள். அரசனுக்கே அவன் விடுவிக்க முடியாத பெரிய புதிராக விளங்குகிறான். மேலே மேலே என்ன ஆகுமோ, எப்படித் திரும்புமோ என்று மயிர்க்கூச் செரியச் செய்யும் இந்தக் கதை உங்கள் உள்ளத்தை முற்றும் கவர்ந்து விடும். சம்பவங்களுக்கு ஏற்ற சித்திர ஜோடனைகளும் கதையை அணிசெய்கின்றன.

உங்களுக்கு மற்றொரு முக்கியமான செய்தி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வருஷப் பிறப்பு ஆரம்பத்திலிருந்து மீண்டும் கண்ணன் கழகக் கூப்பன் வெளிவரும். இதுவரையில் அங்கத்தினர்கள் ஆகாத வர்கள் உடனே சேரலாம். பழைய அங்கத்தினர்கள் பெயரைப் பதிவு செய்யவே இவ்வளவு நாள் ஆயிற்று. அதற்காகவே புதிய அங்கத்தினர் களைச் சேர்க்காமல் நிறுத்தி வைத்திருந்தோம். இப்பொழுது ஜூன் மாதம் வரையில்தான் கூப்பன்கள் வெளிவரும். அதற்குள் தொடர்ந்தாற் போல் மூன்று கூப்பன்களைப் பூர்த்தி செய்து அனுப்பி அங்கத்தினராகி விடலாம்.

கண்ணன் கழக அங்கத்தினராக ஆனால், உங்கள் ஊரில் கிளைக் கழகங்கள் ஆரம்பிக்கலாம்; அங்கத்தினர்களுக்கான பரிசுப் போட்டி களில் கலந்து கொள்ளலாம்; கதை கட்டுரைகள் எழுதியனுப்பலாம்; கண்ணன் வெளியீடுகளுக்கு உரிய சலுகைகளும் பெறலாம். கோடை விடுமுறை ஆரம்பமாவதற்குள் நீங்கள் அங்கத்தினராகிவிட இதுதான் சரியான சமயம்.

முன்பு நான் கூறியதுபோல, வருஷப்பிறப்பிலிருந்து கண்ணனில் பல புதிய மாறுதல்களை நீங்கள் காணலாம். பொழுதுபோக்குப் பகுதிக்கு வேடிக்கையான கணக்குகள், விளையாட்டுகள், வெடிப் புதிர்கள், குழந் தைப் பாடல்கள், கோணங்கிச் சித்திரங்கள், சிரிப்புத் துணுக்குகள் இவற்றை நீங்கள் தாராளமாக எழுதி அனுப்பலாம். நீங்களே சொந்த மாகவும் எழுதலாம்; உங்கள் பெற்றோர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டும் எழுதியனுப்பலாம்.

ஆசிரியர்

இதோ ஒரு புத்தகம்!

வழிகாட்டிய உத்தமர்

கையிலே கோல் பிடித்த காந்தித் தாத்தாவை அழைத்துச் செல்லும் சிறுவனின் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி! அட்டைப் படத்தின் எழிலே கருத்தைக் கவர்கிறது.

உள்ளே அக்டோபர் மாதம் இரண்டாந்தேதி மகாத்மா காந்தி பிறந்த நாள் என்று ஆரம்பமாகிறது கதை. அந்த நாளைக் கொண்டாடும் ஒரு சிறுவனும் அவன் தந்தையும் படத்தை மாட்டி, கொடிகள் கட்டுவதில் தொடங்குகிறது படம்.

ஒரு பக்கம் காந்தி மகான் பிறந்தது, சிறுவனாக வளர்ந்தது, படித்தது, பாரிஸ்டர் தொழில் செய்தது, தென்னாப்பிரிக்கா சென்றது, திரும்பி வந்தது, காங்கிரஸை வளர்க்கச் சிறைப்பட்டது, சுதந்தரம் கிடைத்ததும் அந்த மகான் இறந்தது வரையில் கதை அழகாக சின்னக் குழந்தைக்கும் புரியும்படி செல்கிறது. எதிர்ப் பக்கமெல்லாம் ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சியும் அழகிய படங்களாக வரையப்பட் டிருக்கிறது. கைக்குப் பூஷணம்; கருத்துக்கு அமிர்தம். ஆர்ட் காகிதத்தில் அச்சிட்ட புத்தகம். எட்டணாதான் விலை; எவ்வளவு மலிவு! ஆசிரியர்: எஸ். ஏ. ரஹீம். சித்திரம்: ரெஸாக். கிடைக்குமிடம்: முருகன் பதிப்பகம், திருச்சி.

—வி. அநசூயா, சென்னை.

அசட்டுப் பிச்சு

ஆர்வி அவர்களின் "அசட்டுப் பிச்சு" என்ற புத்தகம் சிறுவர் கதை உலகிற்கே முற்றிலும் புதுமையானது. ஆரம்பமே அலாதி. அசட்டுத்தனமும் ஓர் இனந்தெரியாத பயமும் கொண்ட கதாநாயகனை அந்த அசட்டுப் பிச்சுவை நாம் என்றும் மறக்க முடியாதபடி அறிமுகப்படுத்தி விட்டார் ஆசிரியர். அசட்டுப் பிச்சு முயற்சி எடுத்துக்கொள்ளாமலே பல காரியங்களை அவன் கண்டு பிடித்ததாகச் சித்திரித்திருக்கிறார். "காக்காய் உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாய்" எல்லாம் நடக்கிறது. முடியும் பொழுதுகூட, துப்பறியாமலே குற்றவாளியைக் கண்டு பிடித்துக் கொடுக்கிறான் அசட்டுப் பிச்சு. அசட்டுப் பிச்சுவைப் படித்தவுடன் அவன் அதிர்ஷ்டத்தைப் புகழ்வதா, அல்லது செய்யும் காரியங்களைப் பார்த்துச் சிரிப்பதா என்றே தெரியவில்லை. விந்தையான கதை. இது வரையில் கண்டிராத புது முறையில் புத்தக வடிவில் வெளி வந்துள்ளது. சிறந்த பொழுது போக்குக் கதை. விலை ரூ. 1-0-0.

கிடைக்கும் இடம்: கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.

—முரு. சுப்பிரமணியன், தென்னூர், திருச்சி.

ஜக்கு

ஜக்கு! எடுத்த எடுப்பிலேயே சிறுவர்களை வசீகரிக்கும் சிறந்த புத்தகம் ஜக்கு. பட்டணம் போகிறேன் என்று நண்பர்களிடம் பெருமை அடித்துக் கொள்வதும், ஆற்றுப்பாலத்தின்மீது நடப்பதும், ரெயில் வந்து நிற்பதும், நம்மை நேரிலேயே ஆசிரியர் 'ஆர்வி' அவர்கள் அழைத்துச் சென்று காட்டுவதுபோல அமைந்துள்ளது. சிறுவர்கள் சிநேகம் பிடிக்கும் முறையையும், சண்டை போட்டுக்கொள்ளும் முறையையும் 'ஆர்வி' அவர்கள் எங்கேதான் கற்றாரோ?

முடிவாக ஆசிரியர் ஜக்குவோடு நம்மையும் சென்னைக்குக் கூட்டிச் சென்று, ஜக்கு போன இடங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்று, ஜக்கு செய்யும் சாகஸங்களைப் பார்க்கச் செய்துவிடுகிறார்.

அழகான நடை, கருத்துக் குவியல், கற்பனைப் பூங்கா, இனிய கதை, இவைகள் ஒருங்கே சேர்ந்ததுதான் ஜக்கு.

உங்களுக்கும் படிக்க ஆவலாயிருக்கிறதா? எட்டே அணாதான்; சட்டென்று கண்ணன் காரியாலயத்திற்கு எழுதிக் கேளுங்கள்.

—S. P. சீனிவாசன், மேலைச்சிவபுரி. (திருச்சி மாவட்டம்.)

ரேடியோ விமரிசனம்

குழந்தை ராஜா

வணக்கம். 3 - 3 - 56 சனிக்கிழமை சிறுவர் நிகழ்ச்சியைக் கேட்டேன். மிகவும் நன்ருக இருந்தது. ஆனல் ''குழந்தை ராஜா'' என்ற நாடகம் சென்ற வருடம் மே மாதம் ஒலிபரப்பப் பட்டது. மறுபடியும் அந்த நாடகத்தை ஒலிபரப்பின போதிலும், இந்த முறை நடித்த நடிப்பு சென்ற முறையை விட நன்ருக இருந்தது. கிட்டுவாக நடித்த வியாஸ் மிகவும் நன்ருக உணர்ச்சியுடன் நடித்தார். ''ராஜாவாக'' நடித்த சந்தானம் குழந்தை ராஜாவாகவே மாறிவிட்டார். ராணியாக நடித்த வஸந்தா, ராஜாவுக்காகக் கிட்டுவுடனும் ரேவதியுடனும் பேசும் போதும் சண்டையிடும்போதும் நம் மனத்தைக் கவர்ந்துவிடுகிருர்.

இரண்டாவதாக, தானே எல்லாப் பாத்திரங்களையும் ஏற்று நடித்த S. கிருஷ்ணசாமியின் நாடகம், ஒரு புது நிகழ்ச்சியே. இருந்தாலும் அவர் அவ்வளவு வேகமாக நடித்திருக்கக் கூடாது.

மூன்ருவதாக, 'பாரதி கலைக் கழகம்' தயாரித்த கட்டபொம்மன் நாடகம் பலே ஜோர்! கட்டபொம்மனுக நடித்த கிருஷ்ணகுமார், தொண்டைமானுடன் பேசும்போதும், வழக்காடும்போதும், நாம் இங்கு இருப்பதாகவே தோன்றவில்லை. நேரில் சென்று, வழக்கைப் பார்ப்பது போன்ற உணர்ச்சி எற்படுகிறது.

பொதுவாக, ரேடியோ வாரத்தில் இந்தச் சிறுவர் நிகழ்ச்சி மூன்று இனிப்புக்கள் கலந்து செய்த 'ஜாம்' தான்! அதை எத்தனை பேர் உண்டு, ருசியைத் தெரிந்துகொண்டார்களோ?

—K. N. பாலசுப்பிரமணியன், கொளிஞ்சிவாடி.

பாப்பா மலர்

இன்றைய நிகழ்ச்சிகள் பாராட்டுவதற்கு உரிய நிலையில் அமைய வில்லை. முதல் நிகழ்ச்சியான 'கருமியின் கதி' என்ற நாடகம் அரிய நீதியை விளக்குகிறது. ஆனல் அந்த நாடகம் நன்ருக நடிக்கப் படவில்லை. ரேடியோவைச் சார்ந்த நாடகம் மிகவும் சுமாராகத்தான் இருந்தது. 'மார்க் கோனி' யாக நடித்த சிறுவன் மட்டும் நன்ருக நடித்து நம் நன்மதிப்பைப் பெற்றுவிட்டான். ரமேஷின் 'பட்டணம்' என்ற மழலைப் பாட்டு பிரமாதம் என்றுதான் சொல்லவேண்டும். சாலை விதிகளைச் சிறு நாடகம்போல் இரு சிறுமிகள் நடித்தனர். அந்த நிகழ்ச்சி பாப்பா மலருக்கே சிகரம் போல் விளங்கியது. அதன் பின் பாடப்பட்ட பாட்டு நன்ருக இருந்தது. கடைசியில் ரேடியோ மாமா கேட்ட கேள்விக்குச் சங்கர் என்ற சிறுவன் விளக்கத்துடன் விடை கூறினன். அவன் அறிவை மெச்சினேம்.

* * * *

சிறுவர் நிகழ்ச்சி

இன்று திருவனந்தபுரம் சிறுவர் நிகழ்ச்சி, சிறுவர் நிகழ்ச்சி களுக்கே சிகரம்போல் சிறப்பாக நடைபெற்றது. முதலிலேயே ரேடியோ மாமா ரகசிய விஷயத்தை ஆரம்பித்துவிட்டார். முதல் நிகழ்ச்சியான ''ரகசியக் கோட்டை'' என்னும் நாடகம் சிறுவர்களால் சிறப்பாக நடத்தப்பட்டு நம் நன்மதிப்பைப் பெற்றுவிட்டது.

அதில் நடித்தவர்கள், அஞ்சாமல் அருமையாக நடித்தது பற்றி மிக மகிழ்ச்சி. இரண்டாவதாக ரேடியோ மாமா ஒரு கதையைச் சிறுவர் களுக்குச் சிரமமின்றி எளிதில் விளங்கும்படி எடுத்துக் கூறினர். ''நிழலின் அருமை'' என்ற பாட்டு சிறுவர்களால் சிறப்பாகப் பாடப் பட்டது பின் ரேடியோ மாமா, ''புதைபொருள் ஆராய்ச்சி'' என்ற புதிய விஷயத்தைச் சிறுவர்களுக்கு விளங்கும்படி கூறினர்.

கே. ஹாரிஸ்பாபு, பாளையங்கோட்டை.

எங்கள் ஊரில் ஒரு மனிதர்;
ஏராளப் பொருள் ஈட்டியவர்.
ஆனல், எவர்க்கும் ஒரு காசும்
அளியாக் கஞ்சன் அம்மனிதர்.

கைப்பொருள் குறையும் என்றெண்ணி
கல்யா ணத்தையும் விலக்கியவர்!
பிச்சைக் காரர் வந்திட்டால்
பேயைக் கண்டது போல்எழுவார்;

'போபோ' என்று கூவிடுவார்;
'பொட்'டெனக் கதவைச் சாத்திடுவார்.
தர்மம் ஈயா இம்மனிதர்
தம் வயிற்றுக்கும் செலவழியார்.

பணம்மிக இருந்தும் ஏழையைப்போல்
பாதிப் பட்டினி கிடந்திடுவார்.
பாலும் தயிரும் அருந்தாமல்
பாங்காய் உணவு உண்ணுமல்,

கட்டிச் சோற்றை உப்புடனே
கலந்தே தினமும் தின்றிடுவார்.
இட்டிலி, தோசை தின்றறியார்-
இன்சுவைக் கனிகள் உண்டறியார்-

லட்டு ஜிலேபி கண்டறியார்-
லாடு பாதாங்கீர் கேட்டறியார்!
இப்படி யாக இம்மனிதர்
இருந்தார் எங்கள் ஊரினிலே.

தமக்கும், பிறர்க்கும் பயனின்றி
தனியாய் வாழ்ந்த இம்மனிதர்,
'திடும்' என ஒருநாள் படுக்கையிலே
தீரா நோயில் விழுந்துவிட்டார்!

எட்டிப் பார்பார் யாருமில்லை
'ஏன்' என்று கேட்பார் யாருமில்லை,
அருகில் இருந்து உதவிடவே
அண்டை அயலார் வரவுமில்லை.

மூன்று வதுநாள் ஒருமனிதன்
மூச்சுத் திணற ஓடிவந்தான்.
''படுக்கையில் கிடக்கும் மனிதருக்குப்
பாட்டியின் வழியில் சொந்தம்நான்.

எனவே வைத்தியம் செய்திடுவேன்;
இறவாது இவரைக் காத்திடுவேன்''
என்றே கூறி மருந்தொன்றை
எடுத்தே கஞ்சன் வாயிலிட்டான்.

மருந்தைத் தின்ற மறுநிமிஷம்
மாண்டான் ஐயோ, கஞ்சன் அவன்!
மாண்டவன் ஈட்டிய பொருளெல்லாம்
வந்தவன் கைக்குள் போயிற்றே!

தர்மச் செலவும் செய்யாமல்
தம் வயிற்றுக்கும் உண்ணுமல்
பணத்தைச் சேர்க்கும் மனிதர்நிலை
பரிதாபம் மிகப் பரிதாபம்!

முதல் பரிசுபெற்ற தொடர்கதை:

12

மனோகரும் ராகவனும் வெளியே கிளம்பியதும் எதிரே வந்து விட்டார் சந்தானம். ''எங்கே கிளம்பிவிட்டீர்கள்? ஏரியைச் சுற்றிப் பார்க்கலாம் என்று?'' என்று அவர் கேட்டதும் ராகவன் வெலவெலத்துப் போனான். ''ஆனால் மனோகர் தைரியமாக, ஆமாம் மானேஜர் ஸார். எங்கள் ராகவனுக்குப் படகிலே இந்த ஏரியில் சிறிது தூரம் போகவேண்டும் என்று ஆசையாக இருக்கிறதாம். அவன் அப்பா ஏரியைப் பற்றியும் அதில் படகிலே போவதைப் பற்றியும் பிரமாதமாக வர்ணித்து எங்களுக்கும் ஆசையை ஊட்டியிருக்கிறார். இந்த ஏரியைப் பார்த்ததும் அவனுடைய ஆசை எல்லை மீறி விட்டதாம்'' என்று கூறிச் சிரித்தான்.

சந்தானத்தின் முகம் இதைக் கேட்டதும் மலர்ந்தது. ''ஆகா! இந்த ஊர் ஏரியில் மாலை வேளையிலே சுற்றி வருவதுதான் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும், தெரியுமா? அதுவும் ஏரியின் நடுவிலிருக்கும் திட்டிலே இருக்கும் வீட்டில் இரவு வேளைகளில் தங்கிப் பார்க்கவேண்டும். எவ்வளவு சுகமாக இருக்கும் தெரியுமா? ஆனால் நான் அங்கே வருவதற்கில்லை. நேற்று நடந்த சம்பவத்திற்குப் பிறகு வீட்டை விட்டு நகரவே எனக்கு இஷ்டமில்லை. எதற்கும் முருகனை உங்களுடன் துணையாக அனுப்பி வைக்கிறேன். கவலை எதுவுமில்லாமல் இரண்டு நாட்கள் அந்த வீட்டில் தங்க வேண்டும் என்று தோன்றினாலும் நீங்கள் அப்படியே செய்யலாம். முருகன் உங்களுக்கு வேண்டிய செளகரியங்கள் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்வான். நான் இப்போதே அவனைக் கூப்பிட்டு ஏற்பாடு செய்கிறேன்.''

''அதெல்லாம் ஒன்றும் அவசியமில்லை, ஸார்! முருகன் எல்லாம் அவசியம் என்று எனக்குத் தோன்றவில்லை. நாங்கள் பாட்டிலே போய் வந்து விடுகிறோமே'' என்று ஆக்ஷேபித்துப் பார்த்தான் மனோகர்.

''அதெல்லாம் கூடவே கூடாது, மிஸ்டர் மனோகரன்! தனியாக ஏரிப் பக்கமெல்லாம் போகக் கூடாது. நீங்கள் சிறுவர்கள். ஏரியிலோ தண்ணீர் நிறைய இருக்கிறது. மேலும் புதிய இடம் வேறு. ஏதாவது ஆகிவிட்டால் என் பேரில் பெரிய பழி வந்து சேரும். அதனால் துணை இல்லாமல் நீங்கள் போகக் கூடாது'' என்று கண்டிப்பாகக் கூறினார் அவர். இந்தப் பதில் மனோகருக்குச் சிறிது அதிருப்தியே அளித்தது. என்றாலும் சமயத்திற்குத் தகுந்தாற்போல் சமாளித்துக்

கொள்ளலாம் என்று முடிவு செய்துகொண்டான்.

மாலைச் சூரியன் மெதுவாக மேற்குத் திசையில் மறைந்து கொண்டிருந்தான். அவனுடைய பொன்னிறக் கிரணங்கள் ஏரிக் கரைப் பிரதேசத்தைச் சுவர்க்க லோகமோ என்று பிரமிக்கச் செய்தது. சூரியனின் ஒளிக் கதிர் பட்டு ஏரி நீர் கண்ணையும் கருத்தை யும் கொள்ளை கொண்டது. மெல் லிய காற்று குளுமையாக வீசி, சோர்வை அறவே அகற்றியது. கரையிலிருந்த மரங்களிலுள்ள

கூடுகளை நாடிப் பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து சென்றுகொண்டிருந்தன. நாளெல் லாம் பல இடங்களிலும் அலைந்து திரிந்ததால் மேல் படிந்த அழுக்கை அகற்றித் தம் மேனியைப் பளபளப் பாக்கிக் கொள்வதற்காகக் காகங் கள் நீரில் மூழ்கி எழுந்தன. 'ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்' ஒற் றைக் காலிலே நின்று தவம் செய்த கொக்குகள், வான வீதியிலே பறந் தன. பக்ஷிகளின் இனிய குரல்கள் செவிக்கு இனிமையாக அந்தப் பிரதேசம் முழுவதும் எதிரொலித் தன. இந்த உலகத்துக் கவலைகளை எல்லாம் ஒழித்து இன்ப உலகுக்கு அழைத்துச் செல்லக்கூடிய சூழ் நிலை என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். இப்படித்தான் படகி லிருந்த மனோகரும் ராகவனும் நினைத்தார்கள்.

படகு நீரைக் கிழித்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தது. அந்தச் சமயத்திலே ஏரிக் கரையில் இரண்டு ஆட்கள் வந்து நின்றார் கள். அவர்கள் மேலே பறந்த பறவைகளைப் பார்த்துத் தங்களுக் குள் ஏதோ பேசிக்கொண்டார் கள். அவர்களில் ஒருவன் தன் கையிலிருந்த துப்பாக்கியை உயர்த்தி மேலே பறந்துகொண் டிருந்த ஒரு காகத்தைக் குறி வைத்துச் சுட்டான். 'டுமீல்' என்று ஒரு சத்தம். துப்பாக்கிக் குண்டு தன் குறியைத் தாக்கி வீழ்த்திற்று. காகம் அலறிக் கொண்டே நீரில் விழுந்தது. அதன் தீனமான கதறல் நெஞ் சைப் பிளப்பதாக இருந்தது. அந்தக் காட்சி மனோகரின்

நெஞ்சைப் பிளந்தது. "சீ! என்ன கேவலமான மனிதர்கள்? மனிதர்களா இவர்கள்? பிசாசுகள்! பாவம்! அந்த வாயில்லா ஜீவனை ஏன்தான் இப்படி வீணாக வதைக்க வேண்டுமோ?" என்று மனோகரன் மனம் கொதித்தான். அதே சமயம் மீண்டும் ஒரு குண்டு வெடிக்கும் சப்தம் கேட்டது. படகிற்குச் சற்றுத் தூரத்தில் அந்தக் குண்டுக்கு இரையான கொக்கு ஒன்று விழுந்தது. மறுபடியும் ஒரு தீனமான அலறல். ஒரு கொக்கு படகை நோக்கி நேராக விழுந்தது. எதிர்பாராதபடி வெகு வேகத்துடன் விழுந்த அந்தக் கொக்கைக் கண்டு பயந்தவன்போல் படகோட்டிக் கொண்டிருந்த முருகன் கிரீச்சிட்டான். அப்படிக் கிரீச்சிட்டபடியே ஒரு புறமாகச் சாய்ந்தான். அதனால் திடீரென்று படகு ஒரு புறமாகச் சாய்ந்தது. படகு ஓர் ஆட்டம் ஆடிவிட்டு 'குபுக்'கென்று கவிழ்ந்தது. படகிலிருந்த மூவரும் ஏரியில் விழுந்தனர். சில விநாடிகள் அங்கே நீரில் குமிழிகள் தோன்றிக்கொண்டிருந்தன.

13

சற்றுப் பொறுத்து நீர் மட்டத்தில் ஒரு தலை மெள்ளத் தெரிந்தது. சுற்றிலும் ஒரு முறை பார்த்துவிட்டு, கரையை நோக்கி அந்த ஆள் வேகமாக நீந்தினான். கரையை அடைந்ததும் வேகமாக எங்கேயோ சென்று மறைந்தான் அந்த ஆள்.

முருகன் திடீரென்று அப்படிச் சாய்ந்து படகைக் கவிழ்க்கக் கூடும் என்ற சந்தேகங்கூட மனோகருக்கோ அல்லது ராகவனுக்கோ அதற்கு முன் ஏற்படாததால் அது ஓர் அதிர்ச்சியாகவே இருந்தது.

எதிர்பாராத அபாயத்திலே சிக்கி விட்டோம் என்பதை நீரிலே விழுந்த கணத்திலேதான் அவர்கள் உணர்ந்தார்கள். கரை காணாத கடல் போலப் பரவிக் கிடந்தது ஏரி. அந்த ஏரி கீழே ஒரே முடிவில்லாமல் ஆழமாகப் போய்க்கொண்டே இருப்பது

போலத் தோன்றியது. மனோகருக்கு ஒரு விநாடியல்ல, ஒரு நிமிஷமல்ல, ஒரு வருஷம்கூட அல்ல, யுக யுகாந்தரங்கள் அப்படியே போய்க்கொண்டிருப்பது போலத் தோன்றியது. கடைசியில் அந்த யாத்திரைக்கும் ஒரு முடிவு ஏற்பட்டது. உள்ளே இருந்து ஏதோ ஒரு சக்தி எதிர்த் திசையில் மேலே மேலே உந்தித் தள்ளிக்கொண்டே வந்தது. அப்பா! கடைசியில் நீர் மட்டம் வந்து விட்டது. மனோகர் வெளிக் காற்றை உற்சாகத்தோடு சுவாசித்தான். அடுத்த கணமே ராகவனின் நினைவு வந்தது அவனுக்கு. சுற்றுமுற்றும் கவனித்துப் பார்த்தான். சற்றுத் தூரத்தில் ராகவன் நீரை எதிர்த்துப் போராடிக் கொண்டு முன்னேக்கி நீந்த முயன்றுகொண் டிருந்தான். இன்னொரு திசையில் கரையை ஓர் ஆள் நெருங்குவது மங்கலாகப் புலப்பட்டது. இரண்டே எட்டில் ராகவன் இருந்த இடத்தை அணுகினான் மனோகரன். அவனையும் இழுத்துக்கொண்டு நீந்த ஆரம்பித்தான். நல்லவேளையாக ஏரித் தண்ணீர் அவர்களைத் திட்டுக்குச் சற்றுச் சமீபத்திலேயே அடித்துக்கொண்டு வந்திருந்தது. இன்னும் சற்றுத் தூரம் நீந்திவிட்டால் திட்டிலே ஏறிவிடலாம். நம்பிக்கையின் பலத்திலே முழுமூச்சுடன் நீந்தினர் இருவரும்.

திட்டு வந்துவிட்டது. முகத்தில் வெற்றிக் களை கூத்தாட இருவரும் கரை ஏறினர்கள். ''அப்பா! ஒரு பெரிய கண்டத்திலிருந்து தப்பினேம். எனக்கு என்னவோ இது முருகன் வேண்டும் என்றே செய்த வேலை என்று தான் தோன்றுகிறது. முருகனைப் போன்ற ஓர் ஆள் ஒரு கொக்கு விழுந்ததைக் கண்டு பயப்படக் கூடும் என்று எனக்குத் தோன்ற வில்லை. அதுவும் தவிர, படகை அப்பால் நகர்த்த முயலாமல் ஒரு புறமாகச் சாய்க்கவேண்டிய அவசியமே இல்லையே. அப்படியே தற்செயலாக நடந்தது என்ருலும் நம்மைத் தேட முயற்சிக்காமல் உடனே திரும்பிக் கரையை நோக்கிப் போவானேன்?'' என்ருன் ராகவன்.

''எப்படியானுல் என்ன? அவன் போனதே நல்லதாயிற்று. நாம் எப்படியோ இங்கே வந்து சேர்ந்து விட்டோம். இனிமேல் எவ்வளவு சீக்கிரம் வேலையை முடிக்க முடியுமோ, அவ்வவவு சீக்கிரம் முடித்துக்கொண்டு கிளம்ப வேண்டும். யாராவது ஒருவேளை நம்மைத் தேடி வந்தாலும் வரக் கூடும்'' என்று கூறிப் புறப்பட்டான் மனோகர்.

அந்தத் திட்டிலே மேடான நடுப் பாகத்தில் அந்தத் தோட்டமும் வீடும் அமைந்திருந்தன. வீட்டின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார்கள் அவர்கள். வீட்டினுள்ளே ஒரே புழுதியும் குப்பையும் நிறைந்து காணப்பட்டன. வெகுநாளாகப் பூட்டியிருந்ததால் ஏற்படும் ஒருவகை துர்நாற்றம் குப்பென்று வீசியது. உள்ளே செல்லவே மிகுந்த பொறுமை தேவையாக இருந்தது. உள்ளே சென்று தட்டுத் தடுமாறி ஓர் அகல் விளக்கையும் தீப்பெட்டியையும் கண்டு பிடித்தான் மனோகரன். விளக்கை ஏற்றிய பிறகு அதனுள்ளே இருந்த எல்லாச் சாமான்களும் மங்கலாகத் தெரிந்தன. ஒரு வீட்டுக்கு வேண்டிய சகல சாமான்களும் அங்கே இருந்தன. ஏரியின் மத்தியிலே இந்தத் திட்டிலே அமைந்திருக்கும் வீட்டிலே எவ்வளவு சாமான்கள் என்று அதிசயித்தான் மனோகர். வீட்டின் பின்புறம் சென்று கவனித்தார்கள். வீடு இருந்த நிலையைக் கவனித்தபோது சமீப காலத்திலே மனிதர்களின் நடமாட்டம் இருந்ததாகத் தோன்றவில்லை. ஆனுல் தோட்டத்திலே மனிதர்கள் வந்து போன அறிகுறிகள் இருந்தன.

வீட்டின் பின்புறத்தோட்டத்தில் வாசற்படிக்கு நேரே நான்கு மரங்கள் இருந்தன. இரண்டு தென்னை மரங்கள் ஒரு பக்கமாகவும், இரண்டு மாமரங்கள் அதற்கு நேர் எதிரிலும் இருந்தன. படத்தில் இருந்த இடத்தை உத்தேசமாகக் குறித்துக்கொண்டு, அங்கே தோண்டத் தொடங்கினர்கள் இருவரும்.

சுமார் மூன்றடி ஆழம் தோண்டிய பிறகு 'டங்' என்ற ஓசை வந்தது. ராகவன் வெகு ஜாக்கிரதையாக அந்த இடத்தைத் தோண்டி ஒரு சிறு பெட்டியை வெளியே எடுத்தான். மனோகரன் சட்டென்று அதைக் கையில் வாங்கிக்கொண்டு, ''ராகவா, பள்ளத்தை முதலில் மூடி, முன்போலவே செய்துவிடு. உள்ளே போய் இதைப் பார்க்கலாம்'' என்றான்.

அந்தச் சிறு பெட்டியைக் கடப்பாறையால் உடைத்துத் திறந்தான் ராகவன். உள்ளே மீண்டும் ஒரு மரப்பெட்டி இருந்தது. அதையும் மிகவும் சிரமப்பட்டுத் திறந்து பார்த்தபோது அதனுள்ளே மீண்டும் பரங்கிக்காயைப் போன்ற வடிவத்தில் ஒரு வெள்ளிச் சிமிழ் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டான். அந்தச் சிமிழை எப்படித் திறப்பதென்றே அவனுக்குப் புரியவில்லை. ''மனோ! இதை எப்படியடா திறப்பது?'' என்றான் ராகவன்.

''வா! நீ ஒரு பக்கம் நான் ஒரு பக்கமாகப் பிடித்து இழுக்கலாம்'' என்றான் மனோகர். வெகு நேரம் இழுத்தும் அதைத் திறக்க முடியாமல் போகவே, ''சே! சனியன்'' என்று ஆத்திரத்துடன் அதை வீசி எறிந்தான் மனோகர்.

14

சிமிழ் அறை மூலையில் சுவரில் மோதிக் கீழே விழுந்தது. 'டக்' கென்று பூட்டுத் திறப்பதைப் போன்ற ஓசை கேட்டது. அடுத்த நிமிஷம் ராகவன் பரபரப்புடன் ஓடி அதைக் கையில் எடுத்தான். என்ன ஆச்சரியம்! இவ்வளவு நேரம் சிரமப்பட்டும் துளிக்கூட அசையாத சிமிழ் இப்போது தானாகத் திறந்துகொண்டது. ''எப்படியடா ராகவா திறந்துகொண்டது?'' என்று கேட்டுக்கொண்டே மனோகரனும் அருகிலே வந்தான்.

''முட்டாள்களடா நாம். இதோ பார், இந்தக் காம்பு இருக்கிறதல்லவா? இதுதான் இந்தச் சிமிழுக்குத் தாழ்ப்பாள். இதை ஒரு புறமாகத் தள்ளியிருந்தால் சிமிழ் தானே திறந்துகொண்டிருந்திருக்கும். அது தெரியாமல் இவ்வளவு நேரம் அவஸ்தைப் பட்டோம். கடைசியில் சுவரில் அந்தக் காம்பு மோதியபோது ஒரு பக்கமாக நகரவே தாழ்ப்பாள் திறந்துவிட்டது. இவ்வளவுதான்'' என்றான், அதன் மூடியை அகற்றியவாறே.

உள்ளே இருந்த சாமானைக் கண்டதும் இருவரும் அப்படியே ஸ்தம்பித்துவிட்டனர். ஒரு நிமிஷம் கழித்த பிறகுதான் அவர்கள் சுய நினைவை அடைய முடிந்தது. ''அவ்வளவும் வைரமடா, மனோ!'' என்றான் ராகவன். மனோகரால் பேசவே முடியவில்லை. ஒளி வீசும் அந்தக் கற்களைப் பார்த்தபடியே இருந்தான். பிறகு சட்டென்று நிமிர்ந்து, ''ராகவா! இப்போது தான் எனக்கு நிஜமாகவே பயமாக இருக்கிறது. இவை யார் வைத்த வைரங்களோ, எதற்காக வைத்ததோ, ஒன்றும் நமக்குத் தெரி

முடியுமா?

இந்தப் படத்தை ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் கை எடுக்காமலும் வரைந்த கோட்டின் மீதே செல்லாமலும் (ஒன்றை ஒன்று கடந்து செல்லலாம்) பூர்த்தியாக்க உங்களால் முடியுமா? முயன்று பாருங்கள்!

—சம்பத்குமார், வேலூர்.

(விடை: அடுத்த பக்கம்)

யாது. இதைத் தேடி அடையத் தான் சிற்றப்பாவின் புத்தக அறையைச் சில பேர் வட்டமிடுகிருர்கள் என்பது மட்டும் நன்ருகத் தெரிகிறது. இது நம்மிடம் கிடைத்தது அவர்களுக்குத் தெரிந்துவிட்டால் நம்மை உயிருடன் விடமாட்டார்கள். அவர்கள் சந்தானத்தின் ஆட்களோ, வக்கீலின் ஆட்களோ: யார் என்று தெரியாத வரை இந்த வைரத்தை நாம் வைத்துக் கொள்ள முடியாது. இங்கேயே விட்டு விடலாமென்ருலும் அது உரிமையில்லாத ஒருவனுக்குச் சொந்தமாகிவிடும். என்ன செய்வது?'' என்ருன்.

ராகவன் சற்று நேரம் யோசித்துவிட்டு, ''மனே! இன்று இரவுக்குள் இந்தத் திட்டை விட்டு வெளியேற முடியுமா?'' என்று கேட்டான். இப்போதே இன்ஸ்பெக்டரின் வீட்டுக்குப் போய் அவரிடம் கொடுத்து வைத்து விடலாம். பொழுது விடிந்த பின்பு தான் போக முடியும் என்ருல் நம்மால் ஒன்றும் முடியாது. சந்தானம் அதற்குள் நம்மைக் கண்காணிக்க வந்துவிடுவார். என் சிற்றப்பா அடிக்கடி இங்கே வருவாராமே. அப்படி என்ருல் இங்கே ஏதாவது படகு இருக்காதா? தேடிப் பார்க்கலாம் வா'' என்று மனேகரன் கூறினன்.

''படகு இருந்தால் அதை ஓட்டத் தெரிய வேண்டாமா?'' என்று இன்னெரு சந்தேகத்தைக் கிளப்பினன் ராகவன்.

''அடே ராகவ்! ஏன் இப்படிப் பயந்து சாகிருய்? உன்னைப் பத்திரமாக நான் கரை சேர்த்துவிடுகிறன். கவலைப்படாதே. ஸ்ரீரங்கத்துக்கும் திருச்சிக்கும் எத்தனை தரம் படகிலே நான் மட்டும் தனியே போயிருக்கிறேன்!'' என்று கூறிக்கொண்டே வீட்டை ஆராயத் தொடங்கினன் அவன்.

அன்று அவன் நரி முகத்தில் தான் விழித்திருக்க வேண்டும். இல்லையென்ருல் அவ்வளவு சீக்கிரமே அந்தச் சிறிய படகு அவன் கண்ணிலே அகப்பட்டிருக்குமா? சமையல் அறையை அடுத்த தாழ்வாரத்திலே இருந்த அதை இருவருமாக இழுத்து வந்து ஏரியிலே இறக்கிவிட்டு, இருவரும் அதிலே ஏறிக் கொண்டார்கள். தூரத்திலே தெரிந்த மஞ்சள் பங்களாவின் விளக்கொளி ஒரு கலங்கரை விளக்கைப்போல் திசை காட்டி உதவியது.

கரையை அடைந்த அவர்கள் படகை ஒரு மரத்திலே கட்டிவிட்டு இன்ஸ்பெக்டரின் வீட்டை நோக்கி நடந்தார்கள். ஒரு புறம் பயம், மறுபுறம் பரபரப்பு; வேருரு பக்கம் சந்தேகம் - இவை மனத்தை அலைக்க இருளுடன் கலந்து பதுங்கிப் பதுங்கி நடந்தார்கள். எங்கேயாவது ஒரு சிறு சப்தம் கேட்டால் கூட அவர்கள் மனம் படபட வென்று அடித்துக்கொண்டது. கையிலே இருந்த அந்தச் சிறு பெட்டி ஒரு பெரும் பாறையைப் போல் கனத்தது.

(தொடரும்)

முடியுமா? விடை:



இதைப் பல வழிகளில் வரையலாம். இங்கே கொடுக்கப்பட்டுள்ளபடி 1-ஆவது எண்ணிலிருந்து ஆரம்பித்து வரிசைக் கிரமமாக 31 - ஆவது கோட்டில் முடிப்பது ஒரு வழி.

[முதலாளி, டைரக்டர், கதாசிரியர் மூவரும் புதுப் படம் எடுக்க ஆலோசனை செய்கிறார்கள்.]

முத: டைரக்டர் ஸார், நல்ல படம் ஒண்ணு பிடிக்கணும். வருஷப் பிறப்பன்று ரிலீஸ் பண்ணணும். ஏற்கெனவே பிடிச்ச படமெல்லாம் ஓசி பாஸிலேதான் ஓடிண்டிருக்கு. ஏகப்பட்ட நஷ்டம்.

டை: கதை எப்படியிருக்கணும், சொல்லுங்க.

முத: கதை எப்படியிருந்தாலும், கத்திச் சண்டை, குத்துச் சண்டை, தந்திரக் காக்ஷிகள், அற்புதங்கள், பரபரப்பு எல்லாம் இருக்கணும்.

டை: சமூகக் கதையா யிருக்கலாமோ?

முத: ஹாட்டும் பூட்டும் சூட்டும் மாட்டத்தெரியாமெ மாட்டிக்கிட்டு, நம்ம ஆசாரங்களை 'டாம், ப்ளடி, நான் ஸென்ஸ்'னு திட்டறதுதானே ஐயா!

டை; நான்ஸென்ஸ்: சமூகத்தைச் சீர்திருத்தக்கூடிய கதை.

முத: அடேடே! சீர்திருத்தமே உங்ககிட்டேதான் உற்பத்தியாச்சுன்னு அடிக்கடி பேப்பர்லே வருது. போய்யா போ! புராணப்படம் எடுக்கலாம்.

டை: புராணம் நாடகத்திற்குத்தான் லாயக்கு!

கதா: சிலருக்குக் கத்திச்சண்டை, சிலருக்கு டான்ஸ், சிலருக்கு ஒப்பாரி, சிலருக்குப் புராணம், சிலருக்குச் சமூகம் இப்படியெல்லாம் விருப்பம். எல்லாத்தையும் சேர்த்து அவியலா அடிச்சு, படம் பிடிச்சா, படம் நன்றாக இல்லாவிட்டாலும் பணம் நிறைய வசூலாகும். எப்படி என் யோசனை?

முத: அப்படிப் பண்ணினா என்ன ஸார், நமக்கு வேண்டியது பணம் தானே?

டை: சரி: ஆனால் சமூகப் படத்திற்குச் செலவு அதிகம் ஆகாது.

முத: வேண்டாம். செலவு எப்படியாவது போகட்டும். மங்களமா புராணத்தையே எடுத்துக்கொள்வோம். கதாசிரியரே! மகாபாரதத்திலே ஒரு நல்ல கட்டத்தைச் சொல்லுங்க.

கதா: லங்கா தகனத்திலிருந்து ஆரம்பிக்கலாமா?

முத: யாரையா, சனியன் பிடிச்சவனாயிருக்கே. நெருப்பு, செருப்புன்னு ஆரம்பிச்சா அவலக்ஷணம் ஐயா. மங்களகரமான சமாசாரமே உங்க அகராதியிலே கிடையாதோ?

கதா: அப்படீன்னா தசரதர் வனவாசம் போன கட்டத்திலேயிருந்து தொடங்குவோம்.

முத: நம்பப் படங்கள்ளாம் குட்டிச்சுவராப் போனதற்குக் காரணம் இப்போல்லே தெரியுது. தசரதர் எப்போய்யா வனவாசம் போனுர்? மகாபாரதத்திலே ஏதாவது சொல்லேயான்னு ராமாயணத்தைக் கட்டிக்கிட்டு அழறியே.

டை: அவர் கிடக்கிருர். பாண்டவர்கள் குதிரைமேல் தலே தெறிக்கக் காட்டுக்குப் போற மாதிரி ஆரம்பிச்சா விறுவிறுப்பு இருக்கும். போற வழியிலே புலி, சிங்கம்: அர்ஜுனனும் பீமனும் இவைகளை எல்லாம் வேட்டையாடல். எப்படி!

கதா: முதலாளி ஸார், எனக்கு ஒரு சந்தேகம்!

முத: என்ன?

கதா: பீமனுடைய தம்பியான தருமர்....

முத: டேடேடே! பீமனுடைய மாமாய்யா தருமர். வேதவ்யாஸர் பேரன் போலே இருக்கே, நீங்க! இந்த மகாபாரதம் 1956 மாடலா?

டை.: பீமனுடைய மாமா ஹுமாயூன் இல்லே?

கதா: யாரோ ஒத்தர். அந்தத் தருமர், காந்திமாதிரி அஹிம்ஸாவாதின்னு எங்க பாட்டி அடிக்கடி சொல்லுவா. அப்படியிருக்கச்சே துஷ்டமிருகங்களை வேட்டையாட அவர் சம்மதித்திருப்பாரா?

முத: அடே போய்யா. படம் பாக்கறவங்களில் பாதிப் பேருக்கு மேலே மகாபாரதமே தெரியாது. தெரிஞ்சா காலக்ஷேபம் மாஞ்சு மாஞ்சு கேப்பாங்களா? சண்டை கிண்டை ஏதாவதிருந்தா அதையே பாத்துக்கிட்டிருப்பாங்களே தவிர, அஹிம்ஸாவாதி, ஆட்டுக்குட்டி இதைத்தான் கவனிக்கறுங்களாக்கும். டைரக்டர் ஸார், ஸர்க்கஸிலே புலியைப் பார்த்தாலே மயக்கம் போட்டு நம்ப சிப்பாயிங்க பல்டி அடிப்பாங்களே. காட்டிலே புலியை எப்படி வேட்டையாடுவாங்க?

கதா: குண்டுப் பூனை ஒண்ணைப் போட்டோ எடுத்து என்லார்ஜ் செஞ்சுட்டாப் போச்சு.

டை: ஓய், உமக்கும் போட்டோ கிராபிக்கும் ஸ்நானப் பிராப்தி கூடக் கிடையாது. வாயை மூடிண்டு கிடங்க.

முத: காட்டிற்குப் போகவேண்டியிருப்பதை நினைத்து அழுவதற்காக, சோக ரஸம் வழிஞ்சு ஓடி, ஆடியன்ஸ் தலை மேலே சொட்டும்படி ஹிந்தி மெட்டிலே ஒரு ட்யூன் காப்பி அடிக்கணும்.

கதா: யார் பாடறது?

டை: பீமன்தான்.

முத: நாராயண! பீமன் பாடினுல் சுருதிக்கு ஹைட்ரஜன் பாம்தான் வைக்கணும். மண்டோதரியைப் பாடச்சொன்னு என்ன?

கதா: மண்டோதரியா, குண்டோதரியா? யார் ஸார், அந்த அம்மா?

முத: பீமனுடைய மனைவி!

டை: அட, ஈசுவரா! மண்டோதரி கோவலனுடைய கொள்ளுப் பாட்டீன்னு?

முத: அப்படீன்னு பாண்டவர்களுடைய மனைவி யார்?

கதா: உம்....ராகினி, டாகினி, மோகினி..எனக்கும் தெரியாது ஸார்.

முத: அந்த ஆக்டுக்கு பிரபல நடிகையாப் பிடிக்கணும்.

டை: நம்ப கன்னுக்குட்டி அம்மாவைப் போட்டாப் போச்சு.

முத: அட கண்ருவியே, அவளுக்குத் தமிழ் 'ததிங்கணத்தோம்' தாளம் போடுமே!

கதா: இன்னும் கதையே தீர்மானமாகல்லே. அதுக்குள்ளேயா இந்தக் கொளறுபிகேஷன்?

முத: ரைட். கதையை முதலில் கவனிப்போம்: பாண்டவர்கள் துஷ்டமிருகங்களை வதைத்து ஒரு நகரம் வழியாகப் போகிறமாதிரி கதையைக் கொண்டுபோகணும். எந்த ஊரைப் பிடிக்கலாம், ஸார்!

கதா: அதான் மெட்ராஸ் இருக்கே.

முத: அதுதான் எல்லாப் படத்திலேயும் வருதே!

டைர: கேன்பெர்ரா.

முத: கரம்பகோடாவா? அது எங்கேய்யா இருக்கு?

கதா: ஆனைக்கவுனிக்கு அந்தாண்டே.

டைர: நான்ஸென்ஸ், ஆஸ்ட்ரேலியாவில்.

முத: ஏனையா, பணம் செடி

யிலேயா காய்க்குது? அங்கே யாரையா போறது?

டைர: அங்கே ஏன் ஸார், போகணும்? இங்கிலீஷ் படத்திலே ஒரு ஸீனை 'அபேஸ்' பண்ணிட்டாப் போச்சு!

முத: அதெல்லாம் வேண்டாம். கோவில், குளங்கள் இருக்கும் காஞ்சிபுரத்தை எடுத்துக்கொள்ளலாம்.

டைர: பாண்டவர்கள் அங்கே உள்ள அரசனுடைய உத்தியானவனத்திற்குப் போகிறமாதிரியும்..

முத: உம்...

டைர: அங்கே ஒரு டான்ஸ் பார்க்கிறமாதிரியாகவும்....

கதா: அந்த டான்ஸைப் பார்த்து பீமன் தானும் ஆடுகிறமாதிரியாகவும்....

டைர: நான்ஸென்ஸ், ஷட்டப்! நடு டான்ஸில் ராக்ஷஸக் கூட்டம் வருகிறமாதிரியாகவும்...

முத: அட இழவே, ஏனையா?

டைர: பரபரப்பு வேணுமா?

முத: ஓஹோ! கத்திச் சண்டை, பாணுச் சுழட்டல், அது, இது....

டைர: அதையெல்லாம் இங்கே நுழைச்சுவிடலாம். பீமனுக்கும் ராக்ஷஸத் தலைவனுக்கும் லடாய். ராக்ஷஸத் தலைவன் ஹோகயா!

முத: அவன் சாகும்போது தமிழ் நாட்டின் தற்போதய தறிகெட்ட நிலையைப்பற்றி, அடுக்குமொழிகளை அள்ளி வீசி, ராகமாலிகையில் ஒரு பாட்டை அழுதுவிட்டுச் சாகணும். எப்படி?

பீமனுக்கும் ராக்ஷஸத் தலைவனுக்கும் லடய்....

டைர: வெரிகுட்!

முத: சரி, மேலே.

கதா: ராக்ஷஸன் மனைவி ஓடிவந்து இந்திரன் காலில் விழணும். 'தீர்க்க சுமங்கலீ பவ'ன்னு ஆசிர்வாதம் செய்யணும். பீமன் தன் புருஷனைக் கொன்னூட்டான்னு அழணும். தன் வாக்குப் பலிக்க வேண்டி இந்திரன் சுக்ராசாரியரை அனுப்பணும், எப்படி?

டைர: ஷட்டப். நான்ஸென்ஸ். ஒரே அபத்தம். பீமன் சண்டை போட்ட அழகை ஒரு ராஜகுமாரி பார்க்கிருள். உடனே அவனைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிருள் அவள்.

முத: சபாஷ்! கடைசியில் கல்யாணம். இரண்டு டஜன் குழந்தைகள். குழந்தைகளைத் தொட்டிலில் போட்டு 'ஆராரோ'ன்னு பாட்டு.

டைர: ஆனல் ராஜாவுக்கு ஒரு துன்மந்திரி. அவனுக்கு ராஜகுமாரியைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்று எண்ணம். பீமனைச் சண்டைக்கு இழுக்கிருன். தருமர் தடுத்துச் சமாதானமாகப் போகும்படி வேண்டுகிருர். இருவரும் சம்மதிக்கவில்லை. பேப்பர்லே அட்வர்டைஸ் செய்து விநோபாவைச் சமாதானம் பேச ஏற்பாடு செய்கிருர்கள்.

கதா: ஒரே அபத்தம். அந்தக் காரியத்திற்கு வசிஷ்டரைத்தான் அனுப்பணும்.

முத: வசிஷ்டரா! அவர் பீமனைவிடக் கோபக்காரராச்சே. தூர்வாஸர் தங்கமானவர். அவரை அனுப்பலாம்.

டைர: ரைட். தூர்வாஸரை மந்திரி அவமதித்துவிடுகிருன். சாந்தஸ்வரூபியான தூர்வாஸருக்குக் கோபம் வந்து தாடிதுடிக்கிறது. பவள வியாபாரி வேஷம் பூண்டு, ராஜாவிடம் வேலைக்கமர்ந்து, மாரீசனை மயக்கி, ஜடாயுவைச் சீவி, ராஜகுமாரியைத் தூக்கிச் செல்கிருர். அப்புறம் சபித்துவிடுகிருர்.

கதா: யாரை, படம் பார்க்கிறவங்களையா? இல்லே, நம்பளையா?

டைர: ஷட்டப்!

முத: பலே! இதுன்னு கதை. அப்புறம் அரசன் தருமர்மேல் படையெடுக்கிருன். அப்படித் தானே?

டைர: ஆமாம். தருமருக்கு உதவியாய் கர்ணன், ஐஸன் ஹோவர், கும்பகர்ணன், ஜெனரல் மக்கார்தர், இந்திரஜித்து, மாண்ட்கோமரி எல்லோரும் வருகிருர்கள்.

முத: பேஷ்! எல்லாச் சண்டையும் ஒண்ணுப் பிசைஞ்சு கமர்கட்டாக அடிச்சுட்டீங்களே. அப்புறம் ராஜாவுக்கு உதவியா மார்ஷல் புல்கானின், ஹிட்லர், முஸோலினி இவங்கள்ளாம் வராங்களாக்கும்; பலே! பலே!.

கதா: கதை ஜோராத்தானிருக்கு. ஆனு இதை மகாபாரதம்னு சொன்னு உதைதான் விழும்.

முத: இந்தக் கதை டைரக்டர் தானே சொன்னுர்?

டைர: என்னங்க, பழியை எம் மேலே போடறீங்க? நீங்கதானே புராணம், சமூகம், கத்திச்சண்டை எல்லாம் கலந்த திருவாதிரைக் கூட்டாக இருக்கணும்னு சொன்னீங்க?

கதா: படத்தை நீங்களும் நானும் பார்த்தாப் போதுமா, இல்லே—

முத: என்னையா முணுமுணுக்கறே?

கதா: இல்லே, டைரக்டர் சொல்ற லைனைப் பார்த்தா, ஓசி பாஸ் கொடுத்தாக்கூடக் கிழிச்சு நம்ப தலைமேலேதான் போடுவாங்க.

முத: படமும் வேண்டாம். ஒரு இழவும் வேண்டாம்.

டைர: ஐயையோ! அப்படிச் சொல்லிட்டா எங்க பிழைப்பு என்ன ஆறது? படம் எடுக்காவிட்டாலும் எனக்குப் போன ஸானும் கொடுங்க.

முத: ஏன், இந்த அருமையான கதை சொன்னதற்கா? டேய் பியூன்! டைரக்டருக்கு லைட் ஹௌஸ், ஹாரீஸ் பிரிட்ஜ், சென்ட்ரல் ஸ்டேஷன் இதையெல்லாம் கொடுத்திருக்கேன். நாளைக்கு ஒரு லாரியிலே இதையெல்லாம் அள்ளிப்போட்டு அவர் வீட்டிலே கொண்டுபோய் வச்சுடு. மறக்காதே. சரி நான் வரேன், டைரக்டர் ஸார்!

[திரை]

ராஜுவின் தாயார்

எஸ். வி. கிருஷ்ணன்

"ராஜு.."

"என்ன அம்மா?"

"கொஞ்சம் வெந்நீர் கொண்டாப்பா; குடிக்கிறத்துக்கு.."

"இந்தாம்மா, வெந்நீர். உடம்பு ஜுரம் இன்னும் இறங்கல்லையாம்மா..?"

"இல்லேடா கண்ணு..அப்பா எங்கே போயிருக்கா?.."

"முதலாளி வீட்டுக்குப் போய் பணம் வாங்கிண்டு வர்றேன்னு சொல்லிட்டுப் போனு."

"அப்பாவுக்கும் உடம்பு தள்ளல்லேடா..நீயும் கூடப் போயிட்டு வரக் கூடாதோ?"

"'தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லை' என்று சொல்லி இருக்கு. அதனுல் அப்பா சொல்படி இங்கே உன்னையும் கவனித்துக் கொண்டு பரீக்ஷைக்கும் படிக்கிறேன்..ஏதாவது வேணும்னு கேளு.."

"ஏண்டா உங்க பள்ளிக்கூடத்திலே கட்டுரைப் போட்டி வைக்கப் போருங்கன்னு சொன்னியே, அது என்னிக்கு? அதுக்கு ஏதாவது படிக்க வேண்டாமா..?"

"இன்றைக்கு மத்தியான்னம் நடத்தப் போருங்க..கட்டுரைப் போட்டிக்கு, என்ன அம்மா படிக்கிறது? அவங்க கொடுக்கிற 'தலைப்பு'க்குத் தகுந்த மாதிரிதான் எழுதணும். அந்தச் சமயத்திலே உன்னை நினைச்சுக்கிறேன். என்ன தோணுறதோ எழுதிட்டு வர்றேன். நல்லா இருந்தால் பரிசு கொடுக்கருங்க.."

"உனக்குக் கட்டாயம் முதல் 'பிரைஸ்' கிடைக்குண்டா, ராஜா."

"என்ன, அம்மாவும் பையனும் தர்க்கம் பண்ணிக்கிட் டிருக்கீங்க?" என்று மெல்லக் கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் சிவானந்தம்.

"அதோ அப்பாவும் டாக்டரும் வருகிறுர்கள் அம்மா" என்றுன் ராஜு.

டாக்டர் ராஜுவின் தாயார் உடம்பைப் பார்த்தார்.

"என்ன, டாக்டர்?" என்றுர் சிவானந்தம், வேதனையைப் புருவச் சுருக்கங்களில் நெளியவிட்டபடி.

"ஒன்றுமில்லை....இன்னும் ஜுரம் 'நார்ம'லுக்கு வரவில்லை. 'பெனிஸிலின்' வாங்கிப் போட்டால் தேவலை என்று தோன்றுகிறது. பணம் கிடைக்கிருப்பலே இருக்கா?"

"இப்பத்தான் முதலாளி வீட்டுக்குப் போய் வந்தேன். அவர் வீட்டில் இல்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் கிடைச்சுடும்..வந்ததும் உங்கள் வீட்டுக்கு வந்து கூப்பிடறேன்."

"டாக்டர் ஸார்..எங்க அம்மாவை எப்படியாவது காப்பாத்திடுங்க ஸார், நாங்க ரொம்ப ஏழை..உங்களுக்கு ஒண்ணும் கொடுக்க முடியாதவங்களா இருக்கோமேன்னு வருத்தமா இருக்கு; நான் தினமும் உங்கள் வீட்டுக்கு வந்து நீங்கள் இட்ட வேலையைச் செய்கிறேன். எங்கம்மாவை மட்டும் கவனிச்சு.."

"நீ படிக்க வேண்டாமா தம்பி?"

"எங்கம்மா பிழைச்சு எழுந்துட்டா அப்புறம் எங்க வாத்தியாரைவிட நல்லாச் சொல்லித் தருவாங்க, ஸார்!"

"எனக்கு நாழியாச்சு, தம்பி.. அழாதே, உங்கம்மா கட்டாயம் பிழைச்சுடுவாங்க!"

டாக்டரது பூட்ஸ்களின் 'டக் டக்' என்ற ஒலி சிறிது சிறிதாகத் தேய்ந்து மறைந்தது.

பிரபல இரும்பு வியாபாரி சொக்கலிங்கம் செட்டியாரிடம் குமாஸ்தா வேலை பார்த்து வந்தார், ராஜூவின் தந்தை சிவானந்தம். ஏதோ சொற்ப வருமானத்தில் குடும்பம் மிகவும் கஷ்ட நிலையில் ஓடிக்கொண்டிருந்தது. பெரிய தயாள குணமுள்ள ஒருவரின் ஆதரவினால் ராஜூ ஹைஸ்கூலில் சேர்ந்து படித்துவந்தான்.

முதலாளியிடம் 'அட்வான்ஸா'க் கேட்கலாம் என்ற எண்ணத்துடன் அவர் வீட்டை நோக்கி நடந்தார் சிவானந்தம். ராஜூவும் அவரோடு நடந்துகொண்டிருந்தான்.

"என்ன கணக்கப்பிள்ளை, நேத்திக்குக் கணக்கை முடிக்காமலே வீட்டுக்குப் போயிட்டீங்க?" என்ற முகவுரையுடன் வரவேற்றார் முதலாளி சொக்கலிங்கம்.

"வீட்டிலே உடம்பு சரியாக இல்லே. அதனாலே"

"என்னையா இரண்டு மாசமாவா உடம்பு குணமாகாமெ இருக்கு..?"

"ஆமாங்க. 'டைபாய்டு' ஜூரம். பிழைக்கிறதே பெரும்பாடாயிடும்போல் இருக்குங்க. உங்க கிட்டேதான் இரண்டு மாதச் சம்பளத்தை அட்வான்ஸாக் கேட்டுப் பார்க்கலாம்னு வந்தேன்.. டாக்டர் இன்றைக்கு வந்து 'பெனிஸிலின்' வாங்கணும்னு சொல்லியிருக்காரு.."

"பணம் எங்கே ஐயா இருக்கு? வியாபாரமோ ரொம்ப மந்தமா இருக்கு..பணமுடை வேறே..ஒரு வாரம் கழிச்சுப் பார்க்கலாம்.."

"உங்க தயவாலே ஒரு உயிர் பிழைக்கணும். கருணை காட்டுங்க.."

"சும்மாத் தொந்தரவு பண்ணுதேய்யா..வேலையைக் கவனிங்க. நாழியாச்சு.."

"அப்படிச் சொல்லாதீங்க.. எங்கம்மா பிழைக்கிறதே உங்கக் கையிலேதான் இருக்கு. இல்லேன்னு சொல்லாதீங்க." முதலாளியின் கால்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான் ராஜூ.

"காலை விடு தம்பி. பணம் இருந்தால் தரமாட்டேனா? இரண்டு நாள் கழிச்சுக் கவனிக்கறேன்.. இல்லேன்னு சொல்ல வருத்தமாத்தான் இருக்கு."

ராஜூ வாடிய முகத்துடன் வீடு சேர்ந்தான்.

"என்னடா ராஜூ, அப்பாவுக்குப் பணம் கிடைச்சுதா?"

"இல்லேம்மா. முதலாளி கிட்டே எவ்வளவு கெஞ்சிக் கேட்டும் இல்லேன்னுட்டார்..அப்பாவும் வருத்தமா அங்கேயே உட்கார்ந்திருக்கார்."

"ஏண்டா மத்தியான்னம் கட்டுரைப் போட்டி நடக்கிறதுன்னு சொன்னியே, நாழியாகல்லையா?"

"நான் போகல்லேம்மா. அப்புறம் உன்னை யார் பார்த்துக்கிறது?"

"அதுக்காகவா போகமாட்டேங்கிறே? என் உடம்புக்கு ஒண்ணும் இல்லேடா? பயப்படாமெ போய் நல்லாக் கட்டுரையை எழுதிட்டு வா. கொடுத்திருக்கிற தலைப்பைப் பார்த்து அதுக்குத் தகுந்தமாதிரி யோசனை பண்ணி எழுது."

ராஜூ பள்ளிக்கூடத்திற்கு ஓடினான். ஆனால் அவன் நினைவு முழுவதும் தாயிடமே பதிந்திருந்தது.

கட்டுரைப் போட்டி வெகு அமர்க்களமாக நடந்தேறியது. அன்று மாலையே முடிவு கூற இருந்தனர். வெள்ளைக் காகிதத்தை மசியாக அடித்த ஒவ்வொரு பையனும் தனக்குப் 'பரிசு' கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையோடு பள்ளிக்கூடத்தை முற்றுகையிட்டபடி காத்துக் கிடந்தான்.

ராஜுவும் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான்.

கட்டுரைகள் வேகமாகத் திருத்தப் பெற்று, பரிசுக்குரிய கட்டுரையும் தேர்ந்தெடுக்கப் பட்டபின், பரிசளிப்பு விழா ஆரம்பமாகியது.

கடவுள் வணக்கம் முடிந்தபின் தலைமை ஆசிரியர் பரிசு பெற்ற மாணவனின் பெயரைப் படித்தார். ''ராஜு என்ற சிறுவன் 'தாய்' என்ற கட்டுரை எழுதியதற்காக முதற்பரிசு பெற்றிருக்கிறான்'' என்று கூறி அவர் முடித்ததும் கர கோஷம் வானைப் பிளந்தது.

ராஜுவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அத்தகைய உயர்வு அவன் வாழ்க்கையில் நேரும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை. பலத்த கரகோஷங்களுக்கிடையில் ராஜு மேடையை நோக்கி நடந்தான்.

விழாவிற்குத் தலைமை வகித்த ஸ்ரீமான் சொக்கலிங்கம் செட்டியார் பரிசுத் தொகையான ஐம்பது ரூபாயை ராஜுவிடம் கொடுக்கும்போது அவனை நன்றாக உற்றுப் பார்த்தார். ''ஆம்! காலையில் தன்னிடம் 'தாயைக் காப்பாற்றுங்கள்' என்று கதறிய அதே சிறுவன்! உண்மையிலேயே அவனுக்குப் பரிசு கிடைக்க வேண்டியதுதான்!'' என்று எண்ணினார் அவர்.

பணத்தைப் பெற்றுக்கொண்டு வீட்டை நோக்கி வேகமாக ஓடினான் ராஜு.

அங்கே அம்மா படுத்துக்கொண்டிருக்கவில்லை. எழுந்து உட்கார்ந்திருந்தாள். அப்பா அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கஞ்சி கொடுத்துக்கொண்டிருந்தார்.

இந்தச் செய்தியைக் கேட்டு ராஜுவை அப்படியே ஆனந்தம் பொங்க அணைத்துக்கொண்டாள் அம்மா. ''உனக்கு எந்தக் குறையும் இனி இருக்காதுடா, கண்ணு'' என்று உணர்ச்சி வேகத்தில் அன்பு ததும்பப் பேசினாள் அம்மா.

அப்போது வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.



வாத்தியார்: (நோட்டுப் புஸ்தகத்தைக் காட்டி) டேய், இந்தத் திருக்குறளை எழுதியது யார்?

சோமு: நான்தான் ஸார்!

வாத்தியார்: நீயா? நீ என்ன திருவள்ளுவரா?

சோமு: உண்மையைச் சொல்லிடறேன், ஸார்! நான் இல்லே, எங்கப்பாதான் எழுதினார், ஸார்!

—கே. தியாகராஜன், பாகனேரி.

சொக்கலிங்கம் தான் உள்ளே வந்துகொண்டிருந்தார்.

சிவானந்தம் உடனே எழுந்து அடக்கமாக, "என்னங்க, திடீர்னு இந்த ஏழை வீட்டுக்கு வந்திருக்கிங்க!" என்றார்.

"ஏழையாவது, பணக்காரனாவது! எல்லாம் உள்ளத்திலே இருக்கிற வேறுபாடுதான். இன்னிக்குப் பாருங்க. உங்க கிட்டே கார்த்தாலே பணம் இல்லேன்னு சொல்லிட்டேனே தவிர, அப்புறம் என் மனசு எவ்வளவு சங்கடப்பட்டது, தெரியுமா? இன்னிக்குப் பள்ளிக்கூடத்திலே கட்டுரைப் போட்டி பரிசளிப்பு விழாவிலே என்னைத் தலைமை வகிக்கச் சொன்னாங்க. போயிருந்தேன். அங்கே 'நம்ப ராஜுதான் முதல் பரிசு வாங்கியிருக்கான்னு தெரிஞ்சுது. அவன் எழுதியிருக்கிறதிலே ஒரு நாலு வரியை மாத்திரம் திரும்பத் திரும்ப நூறு தடவை படிச்சிருப்பேன். எனக்கு மனப்பாடம்கூட ஆயிடுச்சு.

" 'தாய்—அவள்தான், உலகத்தின் தெய்வம். அன்பு என்னும் வற்றாத நீரோடையின் சலசலப்பு நிறைந்த இதயம் படைத்தவள். தன் மகன்—மகள்—யாராக இருந்தாலும் தன் பாசம் என்னும் ஆசைக் கரங்களால் அணைத்து ஆறுதல் அளிப்பவள். தாய்க்கு இணையாக உலகத்தில் ஒன்றுமே இல்லை.'

"பார்த்தீங்களா, கணக்குப் பிள்ளை? அவன் தாயாரைக் காப்பாற்றத்தான் ஓடிவந்தேன். டாக்டரை அழைச்சுக்கிட்டு வரட்டுமா, நம்ம காரிலே?"

"வேண்டாங்க....இப்பத்தான் டாக்டர் வந்து ஊசி போட்டுட்டுப் போயிருக்காரு. ரொம்ப இரக்க மனம் படைச்சவருங்க, அந்த டாக்டர். தன் கையிலிருந்து பணம் போட்டு மருந்து வாங்கிக் கொடுத்துட்டுப் போனாரு. மறுபடி வேணும்னு, நடந்தே போய் அழைச்சுக்கிட்டு வந்துடறேன். கார் வேணாங்க."

"அப்படியானால் இந்தாங்க, நூறு ரூபாயை இனமா வச்சுக்குங்க, இனிமே ராஜுவை மேலே படிக்கவைக்க வேண்டியது என் பொறுப்பு. ஆமாம்."

சிறிது நேரத்தில் கார் புழுதிப் படலத்தைக் கிளப்பிக்கொண்டு ஓடி மறைந்தது.

சிவானந்தம் சிந்தித்தார். விநாடிக்கு விநாடி மாறும் இந்த உலகத்தின் போக்கே அவருக்குப் புரியவில்லை. கைகளில் நூறுரூபாய் நடனமாடியது. "ராஜு" என்று அழைத்தபடி திரும்பிப் பார்த்தார். அம்மாவின் மடியில் தலை வைத்துப் படுத்து, கதை கேட்டுக்கொண்டிருந்தான் ராஜு. எதிர்பாராத இன்பத்தில் ஏற்பட்ட ஆனந்தம் அவர் இதழ்க்கடையில் புன்னகையாக நெளிந்தது.

வழி பிறந்தது

ஜே. எம். சாலி

அப்பா கலவரத்தோடு உட்கார்ந்திருந்தார். என்றுமே கண்டிராத வண்ணம் சோக ரேகைகள் அவர் முகத்தில் படிந்திருந்தன. சற்றுமுன் வந்த கிராமக் கர்ணத்தின் ஆள்தான் அப்பாவின் வருத்தத்திற்குத் தூபம் போட்டுப் போனான். எங்களுக்கு இருக்கும் இரண்டு ஏக்கர் நிலத்திற்குரிய வாய்தாப் பணம் இன்னும் கட்டியாகவில்லை. மாதம் முடிய இன்னும் இரண்டு நாட்களே இருந்தன.

''ஓய், பிள்ளை! ஊரிலே எல்லாரும் பணத்தைக் கொடுத்திட்டாங்க; நீர் மட்டுந்தான் பாக்கி. வரி கொடுக்க யோக்கியதை இல்லாத உமக்கு எதுக்கையா நிலம்? அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நாளைக்கு மறுநாள் தாலுகா கச்சேரிக்குப் பணத்தை அனுப்பப் போறோம். இப்போ பணங்கொடுக்க இஷ்டமில்லேன்னு, நேரே கச்சேரிக்குப் போய் அபராதத்தோட கட்டிட்டு வரலாம். மாடு கன்றை யாவது விற்று, சர்க்காருக்குக் கொடுக்க வேண்டியதைக்கவனியும். ஆமாம்; சொல்லிவிட்டேன்.''— இதைத்தான் கர்ணத்தின் கையாள் கூறி விட்டுப் போனான்.

அப்பா மனம் குன்றிப்போனார். நானும் துணுக்குற்றேன்.

''ஏன் அப்பா, அப்படீன்னா வேறு வழியே இல்லையா? உங்கள் தேயிலைக் கம்பெனி முதலாளி கிட்டேயாவது கடன் கேட்டுப் பாருங்களேன். நம் பரம்பரை நிலமல்லவா அது?'' என்றேன்.

''தேயிலைக் கம்பெனியா? அங்கே எனக்கு என்ன வேலை? அந்த வேலைக்கு நேற்றே முழுக்குப் போட்டாகி விட்டதே!'' என்று அப்பா சொன்னார்.

''உண்மையாகவா அப்பா? உங்கள் வேலையில் என்ன குற்றம் கண்டுவிட்டார்கள்?'' ஆச்சரியத்தோடு கேட்டேன்.

''உண்மையான உழைப்பாளிகளுக்கு இவ்வுலகில்தான் இடமில்லையே! நாய்போல் உழைத்தாலும் இந்த நாசகாரர்கள் சூழ்ந்த உலகில் நல்லவனுக்கு இடமில்லை தான்!'' அப்போதைய நிலையில் அப்பா என்னென்னவோ பேசினார்.

''வரிப்பணம் கொடுக்க வழியே இல்லையா, அப்பா?''

'' 'தை பிறந்தால் வழி பிறக்கும் என்றுதான் சொல்லுவார்கள். நம் வாழ்வில் எங்கே வழி பிறக்கப் போகிறது? உன் அண்ணன் இப்

பொழுது இங்கிருந்தால் நமக்கு ஏன் இவ்வளவு அல்லல்? சிங்களத் தீவிலே எங்கிருக்கிருனே! அவன் படித்த படிப்புக்கு நம் குடும்பத்தையே தாங்குவானே! நாம் என்ன செய்ய முடியும்? 'எல்லாம் அவன் செயல்'!''

அண்ணனைப் பற்றிப் பேசினர் அப்பா.

என் அண்ணனைப் பற்றி எனக்கு ஒன்றும் சரியாகத் தெரியாது. நான் நான்கு வயதுக் குழந்தை அப்பொழுது. அண்ணன் 'ஸ்கூல் பைனல்' பாஸ் செய்துவிட்டு இலங்கைக்கு வேலைக்குப் போனுராம். எட்டு வருஷமாகிவிட்டது. அவரைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. அவர் ஊரில் இருந்தால் நாங்கள் ஏன் கஷ்டப்படவேண்டும்? அப்பா ஐந்து வருஷமாகப் பக்கத்து ஊர் தேயிலைக் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். அதிலிருந்து ஏதோ வருமானம் வந்துகொண்டிருந்தது. சூழ்ச்சிக்காரர்கள் நிறைந்த கம்பெனியில் அசூயைக்கு என்ன குறைவு? அப்பாவின் வேலைக்கு முடிவு தேடித் தந்து விட்டார்கள்.

பள்ளிச்சம்பளம் கட்டின பாடில்லை. பெரிய பண்டிகை வேறு வருகிறது. களிப்புற வேண்டிய நேரத்தில் கவலை. இறைவன் சிருஷ்டியில் இது இயல்புதானே! துன்பம் இருந்தால் இன்பமும் உண்டு. அதற்கு நாங்கள் மட்டும் விதிவிலக்கா? அப்பாவின் வருத்தமும் குடும்பக் கவலையும் என்னை நிலைகுலையச் செய்தன. நான் என்ன செய்ய முடியும்? எனக்கு யார் வேலை கொடுப்பார்கள்?

என் மனம் அலைகடல்போல் அமைதியற்றிருந்தது. குழப்பத்தைப் போக்க விரும்பினேன். வழக்கம்போல் ரெயிலடி நோக்கிச் சென்றேன்; உட்கார்ந்திருந்தேன். கரும் புகையைக் கக்கிக்கொண்டு புகை வண்டி வந்துகொண்டிருந்தது. நிலையத்தில் வந்து நின்றது. கிராமத்தில் யார் இறங்கப் போகிருர்கள்? ஒரிருவர் மட்டும் வண்டியை விட்டு இறங்கினர்.

அலையலையாகப் படிந்திருந்த அழகான கிராப்புத் தலை; கண்கவரும் வண்ணத்தில் 'பான்ட்'; முழுக்கை சட்டை; காலில் 'பூட்ஸ்'; கையிலே கடிகாரம்—இவற்ருேடு ஓர் இளைஞர் ரெயிலை விட்டு இறங்கிஞர்.

அவர் விரலிலிருந்து பளிச் சென்று கீழே விழுந்தது ஒரு பொருள். அவர் நிலையத்திற்கு வந்து 'ஸ்டேஷன் மாஸ்ட'ரோடு பேசிக்கொண்டிருந்தார். ரெயில் கிளம்பியது. அவர் இறங்கிய இடத்தில் போய் பார்த்தேன். விலை உயர்ந்த மோதிரம்! கையில் எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கிப் பறந்தேன்.

* * *

"அப்பா, இதோ இருக்கிறது! விற்றுவாருங்கள்; நம் கவலை தீர்ந்து விட்டது.'' விரைவாக அப்பாவின் கையில் கொடுத்தேன்.

''என்ன ரவி, நீயா இப்படிச் செய்தாய்? எங்கே திருடிஞய்? திருடியா நம் துன்பத்தைப் போக்கிக்கொள்ளவேண்டும்? சீக்கிரம் சொல்! உனக்கு இது ஏது?

''நான் திருடவில்லை அப்பா! ரெயிலடியில் நின்றேன்; மோதிரம் விரலிலிருந்து நழுவ, கீழே போட்டுச் சென்றுவிட்டார் ஓர் இளைஞர். நான் எடுத்து வந்துவிட்டேன். இதென்ன திருட்டா, தவரு?..''

''ரவி! பெரிய தவறு செய்து விட்டாய், போ! இப்பொழுதே போய் அவரைத் தேடிக் கண்டு பிடித்து மோதிரத்தைக் கொடுத்து விடு.''

''அப்பா! மீண்டும் சொல்லுகிறேன். நம் கஷ்டம் தீர வேறு வழி?..இது காணுமல் போனதால் அவருக்கு ஒன்றும் ஆகிவிடாது.''

''கஷ்டத்திற்காக நேர்மையைப் புறக்கணிப்பதா? நேர்மைதான் பெரிது. சீக்கிரம் போ!'' என்று அவசரப்படுத்திஞர் அப்பா.

மோதிரத்தைக் கையில் வாங்கிக் கொண்டு, ரெயில்வே ஸ்டேஷனை நோக்கி ஓடினேன்.

அந்த இளைஞர் ஸ்டேஷன் மாஸ்டரிடம் இன்பமாக உரையாடிக் கொண்டிருந்தார்.

''ஸார்! இது உங்கள் மோதிரமா? பிளாட்பாரத்தில் கிடந்தது. விரலிலிருந்து நழுவி விழுந்திருக்க



லாம்'' என்று சொல்லிக்கொண்டே அவரிடம் நீட்டினேன்.

விரலைப் பார்த்த அவர் திடுக்கிட்டார்.

''தம்பி! என்னுடைய மோதிரந்தான் இது. உன் நேர்மைக்கு மகிழ்ச்சி. இந்தா! உனக்கு என் அன்பளிப்பு!'' என்று கூறியபடி ஓர் ஐந்து ரூபாய் நோட்டை என்னிடம் நீட்டினார்.

''எனக்கு வேண்டாம், சார்! நான் உங்களுக்கு அப்படி என்ன செய்துவிட்டேன்? நான் வருகிறேன்.''

அவரிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினேன். அவர் தம் பேச்சை முடித்துக்கொண்டு, தெருப்பக்கம் சென்றுகொண்டிருந்தார்.

சிறிது நேரத்திற்குப்பின் வீட்டிற்குத் திரும்பினேன். வீட்டு வாசலை நெருங்கும்போது உள்ளே புதுக் குரல் ஒன்று கேட்டது.

''அப்படி இவ்வளவு நாள் என்ன செய்துகொண்டிருந்தாய்?'' என்று என் அப்பா கேட்டார்.

''இலங்கை தேயிலைத் தோட்டத்தில் ஆரம்பத்தில் குமாஸ்தாவாக இருந்தேன். என் உழைப்பைக் கண்டு வியந்தார் முதலாளி. தேயிலைப் பயிரின் நுட்பங்களை நன்ருக அறிந்துகொண்டேன். என்மேல் முதலாளிக்கு அளவற்ற அன்பு ஏற்பட்டது. அதனுல் கல்லூரிப் படிப்பை முடிக்க உதவி செய்தார். காரணம், அவருக்கு ஆண் பிள்ளை இல்லாததுதான். என் படிப்பு முடிந்தது. மானேஜரும் தன் தொழிலை விட்டு ஓய்வு பெற்றுக்கொண்டார். அது முதல் இன்றுவரை நானே மானேஜர், நிர்வாகி எல்லாம்.

''இப்பொழுது என் மேற்பார்வையில்தான் தொழில் நடந்து வருகிறது. தொழிலாவர் நலன்களுக்கான பல வசதிகள் செய்தேன்; தவறுகளை மன்னித்தேன். அதனுல் அவர்கள் என்மேல் சிறந்த மதிப்பு வைத்திருக்கிருர்கள்.

''பக்கத்து ஊர் தேயிலைக் கம்பெனிகூட எங்கள் கிளைதான். அதையும் பார்வையிட்டுக் கணக்குகளைச் சீர்படுத்தவேண்டும் என்பதற்காகவும், உங்களைப் பார்ப்பதற்காகவும்தான் இப்போது நான் இங்கே வந்தேன்'' என்ருர் அவர்.

மீண்டும், ''அப்பா, அந்தக் கம்பெனியைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா: நாளைக்கு அங்கே போய்க் கணக்குகளைச் சரி பார்க்க

வேண்டும்'' என்று அப்பாவிடம் அவர் கேட்டார்.

''நான் வேலை செய்த கம்பெனியைப் பற்றி எனக்குத் தெரியாதா? உண்மையான உழைப்பாளிகள் இருந்தால் நல்ல முறையில் நடக்கும் என்று சொல்ல அவசியம் இல்லை. ஆனால், அங்கே அது தான் இல்லையே!''

''ஓஹோ! அப்படியா போய்விட்டது. நீங்கள்கூட அங்கே வேலை பார்த்தீர்களா? மானேஜர் மன்னார் சாமி நன்றாகக் கவனிப்பதில்லை போல இருக்கிறது. நாளைக்கு நானே பார்த்து விடுகிறேன்'' என்று அவர் சொன்னார்.

''ஏன் ராஜா, நீ வரும்போது முதலாளி ஏதாவது சொன்னாரா?'' என்று அப்பா கேட்டார்.

''சொல்லாமல் என்ன! என்னை இங்கே அனுப்புவதில் பிரியமே இல்லை. உங்களையும், கிளைக் கம்பெனியையும் நீண்ட நாட்களுக்குப் பிறகாவது பார்க்கவேண்டும் என்னும் அவாவினால் தூண்டப்பட்டுத் தான் வந்தேன். இன்னும் ஒரு மாதத்தில் திரும்பிவிட வேண்டும். அவர் பெண் சுகுமாரியை எனக்குத் திருமணம் செய்ய வேண்டுமாம்; அதிக ஆவலோடு இருக்கிறார். உங்கள் சம்மதத்தையும் கேட்டுக்கொண்டு போக வேண்டும் அல்லவா?''

அவர் கூச்சத்தோடு சொன்னார்.

எனக்குத் தலைகால் தெரியாத மகிழ்ச்சி. மகிழ்ச்சிப் பெருக்கால் மதிமயங்கி நின்ற என் செவிகளில் அவர் — அண்ணன் — கூறியதெல்லாம் இனிமையாக ஒலித்துக் கொண்டிருந்தன. என்னையே மறந்து வாசலிலேயே நின்றுகொண்டிருந்தேன்.

''ஆமாம், தம்பி எங்கே அப்பா? காணவில்லையே!'' என்று அண்ணன் கேட்டார்.

நான் அப்பொழுதுதான் உணர்வு பெற்றேன்.

''அண்ணா!'' என்று உணர்ச்சி மேலிட அழைத்துக்கொண்டு உள்ளே சென்றேன். அப்போதைய என் நிலையை—அப்பாவின் நிலையை—வருணிக்கத் தேவையே இல்லை.

மறுநாள் காலை. அண்ணன், அப்பா எல்லோரும் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்கள். கர்ணத்தின் கையாள் கருப்பையன் வரிப் பணம் கேட்டு அவமானப்படுத்தி விடலாம் என்ற நோக்கத்தோடு வந்தான். அண்ணனையும் அப்பாவையும் மாறி மாறிப் பார்த்தான். வாலைக் குழைத்து நிற்கும் நாய் போல் கையைப் பிசைந்து கொண்டு நின்றான்.

''என்ன கருப்பையா, எங்கே? 'வாய்தா'ப் பணம் வாங்கிட்டுப் போகத்தானே!'' அப்பா கருப்பையனைக் கேட்டார்.

''அதற்கு என்னங்க! வரிப் பணமாவது, மண்ணாவது? நீங்க கொடுக்கல்லேன்னா கர்ணம் ஐயா, உங்களுக்காகக் கொடுத்திடமாட்டாருங்களா? இல்லேன்னா என்ன மனிதத் தன்மை? தம்பியைப் பார்த்து எவ்வளவு நாளாகிறது!''

கருப்பையன் பசப்பினான். அவனைப்பற்றி எங்களுக்குத் தெரியாதா, என்ன? ''கருப்பையா, வாய்தா பாக்கி எவ்வளவு இருக்கு, சொல்லேன்; கொடுத்துடறேன்'' என்று அண்ணன் கேட்டார்.

கருப்பையன் சொன்னான்; அண்ணன் கொடுத்தார். வறட்டுச் சிரிப்போடு வாங்கிக் கொண்டு போனான்.

நேற்று வாயில் வரக் கூடாத வார்த்தைகளைப் பேசி, அப்பாவின் மனத்தைப் புண்படுத்திய அதே கருப்பையன், இன்று அண்ணாவைப் பார்த்தவுடன் ஆறுதல் கூற வந்துவிட்டான். நிறங்காட்டி மயக்கும் பச்சோந்திக்கும் அவனுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? பகட்டுக் காட்டும் பச்சோந்திகளுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்று என் மனம் துடித்தது.

கவலை கப்பியிருந்த எங்கள் வாழ்வுக்கு வழி பிறந்துவிட்டது. கடவுள் கண்ணைத் திறந்து விட்டார்! லேசாகத் தவழ்ந்து வந்த இளந்தென்றல் என்னைப் புதுக் களிப்பில் ஆழ்த்தியது.

மந்திரி மணிவண்ணன்

'பானு'

மணிவண்ணன் மிகவும் நல்லவன். விறகு வெட்டிப் பிழைத்து வந்த அவனுக்குத் தெய்வபக்தியும், கொஞ்சம் கல்வியறிவும் இருந்தன. தன் வறுமை வாழ்விலும் நிம்மதியாகவே வாழ்ந்துவந்தான் அவன்.

வழக்கம்போல மணிவண்ணன், கையில் கோடாலியுடன் காலையில் தன் வேலையைக் கவனிக்கப் புறப்பட்டான். முக்கிய வீதிகளின் வழியே நடந்து போய்க்கொண்டிருந்தபோது திடீரென்று ஆரவாரத்துடன் பெரிய ஜனக்கூட்டம் எதிரே வந்துகொண்டிருப்பதைக் கண்டான். கூட்டத்தின் மத்தியில் அரண்மனை யானை, தூக்கிய தும்பிக்கையில் பூமாலையையும், தலையில் வெள்ளிக் குடத்தில் ஜலத்தையும் தாங்கிக்கொண்டு கம்பீரமாக நடந்துவந்தது. அரசாங்கத்துப் பிரமுகர்கள் ஆடம்பரமாக உடையணிந்து அதன் பின்னலேயே வந்துகொண்டிருந்தார்கள்.

சற்று நேரத்துக்கெல்லாம் ஜனங்களெல்லாம் வியக்கும்வண்ணம் அந்த ராஜ வீதியில் மிகவும் அதிசயமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

அரண்மனை யானை மணிவண்ணனிடம் வேகமாக வந்து அவனைக் குடத்து நீரால் அபிஷேகம் செய்து, பூமாலையையும் அவன் கழுத்தில் போட்டு, தும்பிக்கையை உயரத் தூக்கிக்கொண்டு 'ஹோ!' என்று நாடு நகரமெல்லாம் அதிரும்படி பிளிறியது.

அடுத்த நிமிஷம், அரசாங்கத்துப் பிரமுகர்கள் மணிவண்ணனுக்குக் கை கூப்பி வணக்கம் தெரிவித்து, தங்கள் மரியாதையைத் தெரிவித்துக்கொண்டனர். உயர்ந்த பட்டு உடைகளைக் கொடுத்து உடுத்துக் கொள்ளச் செய்தனர். மணிவண்ணன் விஷயம் புரியாமல் அவர்கள் சொன்னபடியெல்லாம் செய்தான்.

உடனே சிலர் அவனை யானையின் மேல் ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் செல்லலாயினர்.

வீரர்களும் பொது ஜனங்களுமாகச் சேர்ந்துகொண்டு, ''விக்கிரமபுரத்து முதல் மந்திரி வாழ்க!'' என்று கோஷமிட்டனர். பிறகு ஊர்வலம் நகரத்துப் பிரதான வீதிகளின் வழியாகச் சென்றது. வர வர, ஜனக் கூட்டம் கணக்கிட முடியாத அளவுக்கு அதிகமாயிற்று. யானைமேல் சவாரி செய்யும் மணிவண்ணன் ஒரேயடியாக ஆச்சரியக் கடலில் மூழ்கிவிட்டான். இவ்வளவும் கனவோ என்ற சந்தேகம் எழுந்தது. உடம்பில் கிள்ளியதில் வலிக்கவே, தான் தூங்கவும் இல்லை, கனவு காணவும் இல்லை என்பது அவனுக்குத் தெரிந்தது.

அரண்மனைக்குச் சென்ற மணிவண்ணனை மன்னன் எதிர்கொண்டழைத்து ஆசனம் கொடுத்து உபசாரம் செய்தான். ஏற்கனவே இருந்த முதல் மந்திரி காலமாகிவிடவே, அந்த நாட்டு நெடுநாளைய வழக்கப்படி பட்டத்து யானையைக்கொண்டு தன்னை முதல் மந்திரியாகத் தேர்ந்தெடுத்தார்கள் என்னும் விஷயம் மணிவண்ணனுக்கு இப்பொழுதுதான் தெரிய வந்தது.

மணிவண்ணனுடைய எளிய தோற்றமும் சொல்பமான பேச்சும் அரசனைக் கவர்ந்துவிட்டன. அவனுக்கு மணிவண்ணனிடம் மிகவும் மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டன. அடிக்கடி மற்ற மந்திரிகளிடம் அவனைப் புகழ்ந்து பேச ஆரம்பித்தான் அரசன்.

இதைக் கண்ட மற்ற மந்திரிகளும் ராஜ சபையிலுள்ள பிரமுகர்களும் மணிவண்ணனிடம் பொறாமை கொள்ளலாயினர். அவனை எப்படியாவது தொலைத்துவிட வேண்டும் என்று எல்லோருமாகச் சேர்ந்து தீர்மானித்தனர். அவர்கள் முதல்மந்திரி மணிவண்ணனைப்பற்றி இல்லாததையும் பொல்லாததையும் அரசனிடம் சொல்லிக் கொடுத்து அரசன் மனத்தை மாற்ற முயன்றனர். அரசன் அவர்கள் பேச்சையெல்லாம் லேசில் நம்புவதாயில்லை.

இதைக் கவனித்த சதிகாரர்கள் அரசனைத் தனியாகச் சந்தித்து, "மகாராஜா, முதல்மந்திரி மணிவண்ணனைத் தாங்கள் அவசியம் கவனிக்க வேண்டும். அவர் மகாராஜாவுக்கு எதிராக ஏதோ ரகசியமாகச் சதி செய்கிறார். தினம் காலையில் ராஜசபைக்கு வருமுன் தனி அறையில் போய் நெடு நேரம் என்னவோ செய்துவிட்டு வருகிறார். அதைப் பற்றி யார் என்ன கேட்டாலும் பதிலே சொல்லுவதில்லை. நேர்மையான காரியமாயிருந்தால் எல்லோருக்கும் தெரியாமல் மறைப்பானேன்? மகாராஜா இதுபற்றி விசாரித்தால் மிகவும் நல்லது!" என்று மகாராஜாவின் மனம் மாறும் வண்ணம் நயமாகச் சொல்லிக் கரைத்தார்கள்.

'கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும்' அல்லவா? மகாராஜாவின் மனமும் மாறியது;

இதைச் சில நாட்கள் அடுத்துக் கவனித்து வந்த அரசனுக்கும் அதிசயமாக இருந்தது.

போலீஸ் சேவகன்: டேய், பையா! உன் நாய்க்குட்டிக்கு லைசென்ஸ் எங்கே?

பாலு: லைசென்ஸா? இது குட்டியாச்சே! இதுக்குக் கார் ஓட்டற வயசு ஆகல்லியே!

அரசன் மணிவண்ணனைத் தனியாகச் சந்தித்துக் கேட்டான்.

மணிவண்ணன் மிகவும் வணக்கமாக, "அரசே, தயவு செய்து அதைப் பற்றிக் கேட்க வேண்டாம். அது என் சொந்த விஷயம். மன்னிக்க வேண்டும்!" என்று முதலில் கூறினான்.

அரசனுக்குக் கோபம் பிரமாத வந்துவிட்டது.

இதை அறிந்த மணிவண்ணன் மிகவும் பணிவோடு, "மகாராஜா, உங்களுக்கு அந்தச் சிரமம் சிறிதும் வேண்டியதில்லை. நாளைக் காலையில் அரண்மனையில், அந்த அறைக்கு அருகில் நான் காத்துக்கொண்டிருப்பேன். தாங்கள் மற்ற மந்திரிகளுடன் அங்கே வந்துவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். உடனே நான் தங்களுக்கு அந்த அறையில் இருக்கும் ரகசியத்தை அம்பலமாக்கிவிடுகிறேன்" என்றான்.

மறுநாள் காலை பொழுது புலர்ந்ததும் மந்திரிகளும் மற்றும் உள்ள ராஜசபையைச் சேர்ந்த பிரமுகர்களும் அரண்மனையின் ஒரு பகுதியில் இருந்த அந்த அறை வாசலில் கூடிவிட்டார்கள்.

மணிவண்ணன் மிகவும் மரியாதையாக அவர்களை, அறைக் கதவைத் திறந்து உள்ளே அழைத்துச் சென்றான்.

உள்ளே அவர்களுக்கெல்லாம் ஓர் அதிசயம் காத்துக்கொண்டிருந்தது. ஒரு பீடத்தில் ஒரு கோடரியும், அதன் அருகில் ஒரு பழைய கந்தல் துணியும் வைக்கப்பட்டிருந்தன.

அரசனும் மந்திரிகளும் அவைகளைப் பார்த்து ஒன்றும் விளங்காமல் விழித்தனர்.

அந்தச் சமயம் மணிவண்ணன் அந்தப் பீடத்துக்கு எதிரில் வந்து நின்றுகொண்டு, "மகாராஜா, மந்திரிகளே! இவைகளைப் பார்த்து நீங்கள் ஒன்றும் புரிந்துகொள்ளவில்லையா? இந்தக் கோடரி என் பழைய வாழ்வைக் குறிக்கிறது. இதுதான் அப்பொழுது எனக்கு அன்னமிட்டு ஆதரித்துவந்த அருந்துணைவனாகவும் ஆபத்தில் கை

கொடுக்கும் ஆதரவாளனுகவும் இருந்துவந்தது. இதோ இந்தக் கந்தைதான் என் மானத்தைக் காக்கும் உடையாக இருந்தது. என்னுடையவை என்று உரிமையோடு சொல்லிக்கொள்ள இவை இரண்டுந்தான் என் உடைமைகளாயிருந்தன. இந்தக் கந்தை என் பழைய நிலையை எனக்குச் சதா நினைவூட்டுகிறது. கொஞ்சமும் எதிர்பாராமல் என்னைத் தேடிவந்த இந்த அரண்மனை வாழ்விலும், அமைச்சர் பதவியிலும்கூட நான் என் பழைய வாழ்வை மறந்துவிட விரும்பவில்லை. ஆகையால்தான் தினந்தோறும் ராஜ சபைக்கு வருவதற்கு முன்பு இவைகளைப் பார்த்து, கந்தல் உடையை அணிந்துகொண்டு கோடரியைச் சற்றுநேரம் தோளில் வைத்துக்கொண்டு இருந்துவிட்டு அங்கே வருவது வழக்கம். வேறு தவறு எதுவும் நான் செய்யவில்லை, மகாராஜா!'' என்று மிகவும் பணிவாகவும் ஆனுல் கம்பீரமாகவும் சொல்லி . முடித்தான்.

அரசன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளித்தது. தன் செய்கைக்கு மன்னிப்புக் கோரினுன். மற்ற மந்திரிகள் மனம் வருந்தித் தலை குனிந்தார்கள். அன்றைத் தினத்திலிருந்து அவர்கள் நல்லவர்களாக மாறினுர்கள்.

உனக்குத் தெரியுமா ?



1. காலியான அலமாரியில் உன்னால் எத்தனை புத்தகங்களை நிரப்ப முடியும்?

2. உலகத்தில் எல்லாரும் ஒரே சமயத்தில் ஒரு காரியத்தைச் செய்துகொண் டிருக்கிறார்கள். அது என்ன?

3. எங்கேயோ ஒரு மூலையில் இருக்கிறது அந்தப் பொருள். இருந்தாலும் உலகம் முழுவதும் சுற்றிக்கொண்டே இருக்கிறது. அதன் பெயர்?



4. மூடிய கண்ணாடி ஜன்னலையும் துளைத்துக்கொண்டு செல்கிறது ஒன்று. ஆனால் கண்ணாடி உடைவதில்லை. அது என்ன?

விடைகள்:

1. ஒன்றுதான். ஒரு புத்தகத்தை வைத்துவிட்டால் பிறகு அந்த அலமாரியைக் காலியானது என்று எப்படிச் சொல்ல முடியும்? 2. நிமிஷத்துக்கு நிமிஷம் ஒவ்வொருவரும் சுவாசித்துக்கொண்டு இருக்கிறார்கள். 3. தபால் தலை 4. ஒளி.

பரிசு பெற்ற தொடர்கதை:

மணா. அரங்கசாமி



ஸி.ஐ.டி சிங்காரம்

௭

பங்களாவினுள் நுழைந்த சங்கரனும் நாகசாமியும் தூரத்திலே தெரிந்த வெளிச்சத்தை நோக்கி நடந்தனர். அந்த வெளிச்சம் ஓர் அறையின் ஜன்னல் வழியே வெளியே தெரிந்துகொண்டிருந்தது. அறையினுள் பேச்சுக் குரல் கேட்டது. மறைந்தபடி நின்று ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார்கள். உள்ளே மூன்று பேர்கள் விளக்கைச் சுற்றி உட்கார்ந்துகொண்டிருந்தனர். அவர்கள் எதைப் பற்றியோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

வெளியே காவல் காத்துக்கொண்டிருந்தவன் ஒருவன் சங்கரனையும் நாகசாமியையும் கவனித்துவிட்டான். அடுத்த கணம் அவர்கள் இருவரையும் பின்னாலிருந்து தலை மீது ஓங்கி அடித்தான். பிறகு இருவரையும் இழுத்துக்கொண்டு உள்ளே சென்றான். திடீர்த் தாக்குதலை இருவரும் எதிர்பார்க்கவில்லை. ஆகவே நிலை தவறி, பிரமித்துவிட்டார்கள்.

விளக்கைச் சுற்றி உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவன், ''டேய், எங்கேடா வந்தீங்க?'' என்று மிரட்டலுடன் கேட்டான். இருவரையும் இழுத்து வந்தவன், ''இவங்க இரண்டு பேரும் ஜன்னல் வழியா உள்ளே பார்த்தானுங்க.. சந்தேகப்பட்டு..'' என்று இழுத்து நீட்டினான் அவன். நாகசாமியும் சங்கரனும் எதுவுமே பேசவில்லை.

கறுத்த உடல்; காவியேறிய பற்கள்; வரிசை தவறி அவை முளைத்து இருந்தன. படியாமல் அடர்ந்திருந்த தலைமயிர்; கழுத்திலே தாயத்து; காளி கோயில் சூலம் போல் கூராக முறுக்கிவிடப்பட்டிருந்த கறுத்த மீசை; இவைகளை ஒரே சமயத்தில் கண்ட எவனும் பயப்படாமல் இருக்க முடியவே முடியாது. இவைகள் அனைத்தும் சேர்ந்த ஓர் உருவத்தைக் கண்ட அவர்களுக்கு அதிர்ச்சி நீங்கவே கால் மணிக்குமேல் பிடித்தது.

அதற்குள் இரண்டாவது ஆசாமி, ''இப்படிக் கேட்டா சரியாப் பதில் வராது, அண்ணே. அடி உதவறாப்பலே எதுவும் உதவாது!'' என்றான். அவன் கையிலே ஒரு குதிரைச் சவுக்கு இருந்தது. அதையும்

அவனையும் மாறி மாறிப் பார்த்தார்கள் நாகசாமியும் சங்கரனும். அவர்கள் முகம் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

கல் நெஞ்சுக்காரனான அவன் நாகசாமியையும் சங்கரனையும் அடிக்கப் பின்வாங்கவில்லை. இருவரும், ''அம்மா, ஐயோ!'' என்று அலறினார்கள். தொடர்ந்து அடியும் விழுந்துகொண்டே இருந்தது. பழுக்கக் காய்ச்சிய இரும்பை உடலில் வைப்பதுபோல இருந்தது இருவருக்கும். பாவம், இனிமேல் உண்மையை மறைப்பதில் லாபமில்லை என்று நடந்ததை அப்படியே சொல்லிவிட்டார்கள்.

''ஐயா, நாங்கள் உண்மையில் உளவு பார்க்க வரல்லே, பசிக்கு ஏதாவது கிடைக்குமின்னுதான் இங்கே வந்தோம்!'' என்றான் சங்கரன்.

பேய்ச் சிரிப்பை உதிர்த்தான் தலைவன். அந்த இரவில் சிரிப்பலை சுவர்களில் மோதி, எதிரொலித்து நிச்சப்தத்தைக் குலைத்தது. அவனுடைய உக்கிரமான பார்வையை இருவராலும் பார்க்கக்கூட முடியாமல் தலையைக் கவிழ்த்துக் கொண்டார்கள்.

''டேய், நீங்க எங்களை ஏமாத்தப் பாத்திங்களோ, பைசல்தான். தீர்த்துடுவோம் தீர்த்து! நீங்க சொன்னதெல்லாம் உண்மைன்னு பேசாமெ எங்கக் கூட்டத்தோடே சேர்ந்துடுங்க. ஆனா, இப்ப சேர்ந்துட்டுருப்பலே போக்குக் காட்டிட்டு, பிறகு தப்பிச்சுக்கலாமின்னு மட்டும் எண்ணிடாதீங்க. ஆமாம்!'' என்றான் தலைவன். அவன் குரலிலே கரகரப்பு ஏற்பட்டு மறைந்தது.

அந்த வார்த்தைகளில் ஒலித்த கண்டிப்பைக் கண்டு இருவரும் அசந்துவிட்டார்கள். தப்பிக்க வழியே இல்லை என்பதைத்தெரிந்து கொண்டார்கள். துக்கம் தொண்டையை அடைத்தது. பாவம்! செய்த சிறு தவற்றுக்குப் பெரிய தண்டனை! ஆயுள்வரை செய்த தவற்றையே தெரிந்து செய்யவேண்டும். கடவுளை வேண்டினார்கள். இனிமேல் அவர்களிடமிருந்து உயிரோடு தப்பமுடியாது. அவர்கள் நிபந்தனைக்கு இணங்குவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இல்லை!

* * *

நாகசாமியின் வீட்டில் நாகசாமியின் அப்பா நாராயணசாமி அதிகக் கோபத்துடன் இருந்தார். ''ஒழுங்காப் படிக்கிறதுதான் இல்லேன்னா, ஒழுங்காக வீட்டிற்காவது வரக்கூடாது?'' என்று கூறிக் கொண்டிருந்தார். ஆனால் நேரம் செல்லச் செல்ல, கவலையும் பயமும் பற்றிக்கொண்டுவிட்டன. நாகசாமியின் தம்பி நடராஜன், 'சங்கரனும் சுந்தரமும்தான் நாகசாமியை எங்கோ அழைத்துப் போனார்கள்' என்று சொல்லவே நாராயணசாமி சங்கரன் வீட்டை நோக்கிச் சென்றார்.

அவர் எதிரே சோக முகத்தோடு சங்கரனின் அப்பா சிவராமன் வந்துகொண் டிருந்தார். ''என்ன சார், உங்க பையன் வந்துட்டானா?'' என்று கேட்டார். ''உங்களைக் கேட்கலாமின்னு நான் வந்தேன்..'' என்றார் சிவராமன்.

''அப்படியானா வாங்க, சார்! சுந்தரத்தின் வீட்டிற்குப் போய்ப் பார்க்கலாம்!'' என்று சிவராமனை அழைத்துக்கொண்டு சுந்தரத்தின் வீட்டிற்குப் போனார் நாராயணசாமி. ஆனால் அங்கேயும் ஏமாற்றமே ஏற்பட்டது. போலீஸில் ரிபோர்ட் எழுதி வைத்துவிட்டுப் பிரிந்து சென்றனர் இருவரும்.

நாட்கள் பறந்தனவே தவிர எந்தவிதத் தகவலும் போலீசாரால் சேகரிக்கவே முடியவில்லை! அடிக்கடி நாராயணசாமியையும் சிவராமனையும் ஸ்டேஷனுக்கு அழைத்து வரும்படி ஆள் வரும். நாகசாமியையும் சங்கரனையும் தவிர வேறு எவனையாவது ஸ்டேஷனுக்குப் போலீஸார் அழைத்து வந்திருப்பார்கள். 'இவர்கள் அல்ல' என்று சொல்லிவிட்டு இருவரும் வீட்டுக்கு வருவார்கள். 'ஏன் போலீசில் எழுதிவைத்தோம்' என்றுகூடக் கவலைப்பட்டார்கள்.

* * *

நாட்கள் சென்றன. நாகசாமியும் சங்கரனும் தலைவனால் சிறிது சிறிதாகப் பழக்கப்பட்டார்கள். நல்ல வழியிலே மனம் செல்வது கஷ்டம்; ஆனால் தீய வழியில் மனம் செல்வது மிகமிகச் சுலபம். வாழைப்பழத்தில் ஊசியை நுழைப்பது போல வெகு சுலபமாக ஒருவனுடைய மனத்தில் கெட்ட எண்ணத்தையும் பழக்கத்தையும் நுழைத்துவிடலாம்.

நாகசாமியும் சங்கரனும் கூடிய விரைவிலே பிரபல போக்கிரிகளாக மாறத் தயாராக்கப்பட்டு விட்டனர். அவர்கள் மனம் எத்தகைய கொடிய செய்கையைச் செய்யவும் அதைப் பார்த்து ரசிக்கவும் தயாராக இருந்தது. தலைவனுக்கே உளவு சொல்லிக் கொடுக்கும் அளவுக்குத் திருட்டுத் தொழிலில் அவர்கள் நல்ல அறிவு பாழ்பட்டிருந்தது.

பெற்றோரை மறந்தார்கள்; நல்லவர்களை மறந்தார்கள்; நல்ல பழக்கங்களை அறவே விட்டொழித்

தார்கள். ஆனுல் கருணையை - பாசத்தை அவர்களால் முற்றும் துறக்க முடியவில்லை. கருணையும் பாசமும் அவர்களை அலைத்து, மனச் சாந்தியை வேரோடு களைந்து எடுத்துவிட்டன.

* * *

சப் இன்ஸ்பெக்டர் சதாசிவம் தன் வீட்டு ஹாலில், குறுக்கும் நெடுக்குமாகக் கைகளைப் பின்னுல் கட்டிக்கொண்டு, நடந்தபடியே ஏதோ முணு முணுத்தார். அவர் அணிந்திருந்த பூட்ஸின் 'கிரீச்' சொலியைத் தவிர வேறு எந்தச் சத்தமுமே அங்கே கேட்கவில்லை!

அவர் முகம் 'ஜிவ்'வென்று சிவந்திருந்தது. பாடுபட்டுப் பிடித்து வந்த அலுப்புகூட இன்னும் தீரவில்லை. இந்த நிலையிலே சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டதாகத் தகவல் வந்தால் அவருக்கு எப்படி இருக்கும்? பக்காத் திருடன் கருடாசிங்கின் கைவரிசைகளை நன்ருகத் தெரிந்துகொண்டிருந்தார் சதாசிவம். ஆகவே அதிகப் பந்தோபஸ்தைச் செய்திருந்தார். அப்படி இருந்தும் தப்பி ஓடிவிட்டான் என்ருல்....

சதாசிவம் யோசித்துப் பார்த்தார். மூளை குழம்பியதுதான் மிச்சம். வேறு பலனையும் காணும்: மண்ணையும் காணேம்!

அப்போது வாயிலில் யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் சிங்காரமும் வசுமதியும் உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் இருவரும் சிரித்த சிரிப்பலைகள் ஹாலில் மோதி எதிரொலித்து அதிகப்படுத்திக் காட்டியது. சதாசிவத்திற்கு அந்தச் சிரிப்பு எரிச்சலை மூட்டுவதாக இருந்தது. சிங்காரமும் வசுமதியும் சதாசிவத்தின் நிலையைக் கண்டு திடுக்கிட்டார்கள் சிங்காரம் சிறிது சமாளித்துக்கொண்டு, "அப்பா, ஒரு ரோல் பிலிமைக் கழுவணும். நம்ம இலாகா போட்டோ கிராபரிடம் கொடுத்தால் சீக்கிரம் கொடுத்துவிடுவார், இல்லையா?" என்று மெல்லக் கேட்டான்.

வசுமதி, "ஆமாம் அப்பா, அவனைப் பார்த்தா பெரிய கேடியாக இருப்பான் போலத் தெரியுது. அவன் கையிலே இருந்த திருகுக் கத்தியைப் பார்த்தா.." என்று சொல்லி முடிக்குமுன் சதாசிவம் குறுக்கிட்டு, "என்ன, அவன் திருகுக் கத்தி வைத்திருந்தானு? உண்மையாகவா?" என்று கேட்டார். திருகுக் கத்தியை உபயோகிக்கும் திறமை உள்ளவன் ஒருவன் தான் என்பது அவருக்குத் தெரியும். அவன் கருடாசிங்தான் என்பதும் சதாசிவத்திற்குத் தெரியும்.

"ஆமாம், அவன் கையிலே அந்தத் திருகுக் கத்தி எப்படிப் பிரகாசமாக இருந்தது, தெரியுமாப்பா?" என்ருள் வசுமதி.

"எங்கே அவனைப் பார்த்தீங்க?" என்ருர் சதாசிவம்.

"நம் ஊருக்குக் கிட்டே இருக்குதே காடு, அங்கே பார்த்தோம்!" என்ருன் சிங்காரம், உண்மையிலேயே அவன் கருடாசிங்தானு என்று தெரிந்துகொள்ள எண்ணி இருவரையும் அழைத்துக் கொண்டு போட்டோகிராபர் நாதனிடம் சென்ருர்.

"என்ன நாதன், இந்த ரோலைச் சீக்கிரமாகக் கழுவிப் பிரிண்ட் போட்டுக் கொடு!" என்ருர் சதாசிவம் பிலிம் ரோலை நீட்டியபடி.

"இதோ அரை மணியிலே கொண்டுவர்றேன் சார். இதற்காகத்தான் சார், நவீன சாதனங்களெல்லாம் நம் டிபார்ட்மெண்ட் வரவழைத்திருக்குது!" என்று கூறியபடி உள்ளே சென்ருர்.

மூவரும் ஆவலோடு நாதனின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அரைமணி நேரம் அரை நாள் போல நீண்டது. நாம் எதிர்பார்க்கும் பொருள் குறித்த நேரத்திலே வந்தாலும்கூட அது அதிக நேரம் சென்றே வந்தது போலத்தான் தோன்றும்.

சரியாக அரைமணி கழித்து வெளியே வந்த நாதன், "சார், இவனைப் பார்த்தா, நீங்க பிடிச்சு வந்த கருடாசிங்போலத் தெரியுதே!" என்ருர்.

"ஆமாம் சார். என் கஷ்டமெல்லாம் வீணுப் போயிடுத்து. கருடா சிங் சிறையிலே இருந்து தப்பிச்சுக்கிட்டுப் போயிட்டான்,

சார்!'' என்று கூறிய சதாசிவம் படத்தை வாங்கிப் பார்த்தார். பிறகு ''இவன் கருடாசிங்கேதான்! சந்தேகமே இல்லை!'' என்றார் படபடப்புடன்.

சதாசிவம் கோபமாக இருந்த காரணம் மெல்ல இருவருக்கும் இப்போது தான் தெரிந்தது. நாதனிடம் விடை பெற்றுக் கொண்டு மூவரும் வீட்டை அடைந்தனர்.

போகும் வழியில் சிங்காரம் காட்டில் நடந்தவற்றைச் சொல்லிக் கொண்டு வந்தான்.

''கள்ள நோட்டு அச்சடிக்கும் யந்திரம், பிளாக்கு அவைகள்'' என்று தன் ரூமிற்குச் சென்று ஒரு சிறு மூட்டையை அறைக்குள் சதாசிவத்தின்முன் வைத்தான். சதாசிவம் அவற்றைக் கண்டு சந்தோஷப்பட்டுவிட்டு டெலிபோனை எடுத்து ஸ்டேஷனுக்கு 'டயல்' செய்தார்.

''ஹலோ, ஹெட்கான்ஸ்டேபிள் சண்முகம்தானே கேட்பது?''

''ஆமாம், என்ன விசேஷம்?''

''நான்தான் சதாசிவம் பேசுகிறேன். நம்ப சின்னமலைக் காட்டை, தக்க பந்தோபஸ்தோடு யாருக்கும் தெரியாமல் காவல் காக்க ஏற்பாடு செய். நம்மை ஏமாற்றிவிட்டு ஓடினானே கருடாசிங், அங்கேதான் இருக்கிறான்!''

''எஸ்—சார்!''

'டக்'கென்று ரிசீவரைக் கீழே வைத்தார் சதாசிவம். பிறகு, ''சிங்காரம் நீ பத்தாவது பாஸ் செய்தவுடனே உன்னை ஸி. ஐ. டி. இலாகாவிலே சேர்த்துடறேன். இப்போதிலிருந்தே நீ ரங்கராஜுவின் கீழே பழகு. என்ன?'' என்று கேட்டார்.

நெடு நாளாக இருந்த ஆசை அல்லவா அது! உடனே சிங்காரம் ஒப்புக்கொண்டு விட்டான். அதை மறுத்துவிடப் பைத்தியமா என்ன அவனுக்கு?

மறுநாள் சிங்காரத்தை ரங்கராஜுவிடம் அழைத்துக்கொண்டு போனார் சதாசிவம். அவருடைய கட்டுக்கோப்பான உடல், சிவந்தமேனி, கலைந்திருந்து நெற்றியில் தவழ்ந்த தலை மயிர், எடுப்பான நாசி, ஊடுருவிப் பார்க்கும் பிரகாசமான கண்கள், சிரிப்புத் தவழும் முகம் இவைகளைக் கண்ட சிங்காரம் முதலில் மலைத்தான். வெகு சீக்கிரத்திலேயே சிங்காரத்தை இந்த லட்சணங்கள் கவர்ந்துவிட்டன.

சிந்தனையிலே ஆழ்ந்திருந்த அவனை, ''சிங்காரம், உனக்கு இந்தத் தொழிலில் ஈடுபடச் சம்மதமா? இது பொதுமக்களுக்குத் தொண்டு செய்யும் தொழில். என்ன சொல்கிறாய்?'' என்ற ரங்கராஜுவின் கேள்விகள் கலைத்தன.

''இந்த வேலையைச் செய்ய எனக்குப் பூரண சம்மதம், சார்!'' என்றான் சிங்காரம் பதிலுக்கு.

''சரி, நாளைக்குக் காலையிலே வா. ஓய்வு இருக்கும்போதெல்லாம் என்னுடன் நீ இருந்தால் சுலபமாய் இந்தத் துறையிலே முன்னேறலாம்!'' என்றார் ரங்கராஜு.

''சரி,சார்!'' என்று கூறிச் சிங்காரம் விடைபெற்றுக்கொண்டான்.

அவன் வீட்டுக்குச் சென்றதும் வசுமதி ஆவலுடன் ஓடி வந்து, ''என்ன அண்ணா, துப்பறியும் தொழிலில் பழகப் போகிறாயா?'' என்று கேட்டாள்.

''ஆமசம் வசு; சுலபமாக முன்னேறப் போகிறேன்!'' என்று உற்சாகத்துடன் கூறினான் சிங்காரம்.

(தொடரும்)

அரிசில்கிழார்

கி. வா. ஜகந்நாதன்

"நல்லவர் என்பதில் தடை இல்லை. ஆனாலும்....'' அவன் மேலே சொல்லாமல் இழுத்தான்.

"ஆனாலும் என்ன?'' என்று புலவர் கேட்டார்.

"அவர் யார்? விளக்கமாகச் சொல்'' என்றார் அரிசில்கிழார்.

"பேகன் பெரிய வள்ளல் என்ற புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவியிருக்கிறது. புலவர்களிடத்தில் எவ்வளவோ பிரியமாக இருக்கிறார். குடிமக்களிடத்திலும் அன்பு உடையவரே. ஆனால் இங்கே அவரைப் பிரிந்து தனியே வாழுகிறாள் அவருடைய மனைவி கண்ணகி. அந்த அம்மாளுக்கு எத்தனை துயரம் இருக்கும்?''

"ஏன் பிரிந்து வாழுகிறாள்?''

"அந்த அம்மாள் பிரியவில்லை. பேகனாரே பிரிந்து வாழ்கிறார்.''

"என்ன காரணம்?''

"ஒரு காரணமும் இல்லை. இல்வாழ்வில் சிறிய மனத்தாங்கல் நேர்வது இயல்புதான். அதைப் பெரிதாகக் கொள்ளலாமா? தங்களைப் போன்ற புலவர்கள் எங்கள் அரசருக்கு அறிவுரை கூறினால் மறுபடியும் அந்தப் பெண்மணி நல்ல வாழ்வைப் பெறலாம்.''

இவ்வாறு சொன்னவன் அரண்மனையைச் சேர்ந்த அதிகாரிகளில் ஒருவன். அரிசில் என்ற ஊரிலே பிறந்த அரிசில்கிழார் என்னும் புலவரிடந்தான் அவன் பேசினான்.

"நல்ல யோசனை. அப்படியே செய்யலாம்'' என்றார் புலவர்.

அப்போது அங்கே வந்திருந்த கபிலர், பரணர், பெருங்குன்றூர் கிழார் என்பவர்களிடமும் இந்தச் செய்தியைச் சொன்னார். "ஒவ்வொருவரும் வள்ளல் பேகனிடம் சொல்வோம். அவன் தன் மனைவியோடு ஒன்று பட்டு வாழவேண்டுமென்று பாட்டிலே வைத்துச் சொல்வோம்'' என்றார். அவர்களும் அதற்கு இசைந்தார்கள்.

பழனியாண்டவன் கோயில் கொண்டிருக்கும் பழனிக்குப் பழங்காலத்தில் ஆவினன் குடி என்று பேர். அங்கே பேகன் என்ற சிற்றரசன் வாழ்ந்திருந்தான். சிற்றரசர்களை அக்காலத்தில் வேளிர் என்று சொல்வார்கள். பேகனும் அந்த வேளிர்களில் ஒருவன். தமிழ் நாட்டில் கொடையிலே மிகச் சிறந்தவர்களாக ஏழு பேர் முன்பு வாழ்ந்தார்கள். அவர்களை ஏழு பெரு வள்ளல்கள் என்று சொல்வது வழக்கம். அந்த ஏழு வள்ளல்களில் பேகனும் ஒருவன்.

தமிழ்ப் புலவர்களிடத்தில் அவன் அதிகமான மதிப்பு வைத்துப் பழகினான். கடவுளிடத்தில் பக்தி நிறைந்தவன். ஏதோ சிறு சச்சரவு காரணமாக அவன் தன் மனைவி கண்ணகி என்பவளை விலக்கி வைத்திருந்தான். இந்த நிலையை மாற்ற அரசில்கிழார் மற்றப் புலவர்களையும் சேர்த்துக்கொண்டார்.

எல்லோரும் பேகனிடம் சென்று பாடினார்கள். அவன் அவற்றைக் கேட்டு மகிழ்ந்து பரிசில் கொடுக்க வந்தான். "இந்தப் பரிசில் வேண்டாம்'' என்று புலவர்கள் சொன்னார்கள். "என்னால் இயன்ற வேறு பரிசில் எது கேட்டாலும் தருகிறேன்'' என்றான் அவன். அப்படியானால் நீ உன் மனைவியுடன் சேர்ந்து வாழவேண்டும்'' என்று புலவர்கள் சொல்லி ஆளுக்கு ஒரு கவி பாடினார்கள்.

"நீ கொடுக்கும் நகைகளும் பொன்னும் எனக்கு வேண்டாம். எனக்கு விருப்பமான பரிசிலை அளிக்க வேண்டும் என்று உனக்கு எண்ணம் இருந்தால் நீ உடனே ஒன்று செய்ய வேண்டும். உன்னுடைய அன்பைப் பெறாமல், அலங்காரங்களைச் செய்து கொள்ளாமல், தன் கூந்தலில் மலரைச் சூடிக்கொள்ளாமல் இருக்கிறாள் உன் மனைவி. அவள் மறுபடியும் மலரைச் சூடிக்கொள்ள

வேண்டும். உடனே தேரில் குதிரையைப் பூட்டிப் புறப்படு'' என்று அரிசில்கிழாரும் பாடினார்.

தமிழ் நாடு அறிந்த பெரும் புலவர்கள் சொல்வதைத் தட்டும் துணிவு பேகனுக்கு இல்லை. உடனே தன் மனைவியை அழைத்துக் கொண்டு பழையபடி வாழத் தொடங்கினான்.

* * *

சேர நாட்டை அந்தக் காலத்தில் பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேர அரசன் ஆண்டு வந்தான். அவனைப் பார்க்கும் பொருட்டு அரிசில்கிழார் வஞ்சி மாநகருக்குச் சென்றார். சேரன் அவரை வரவேற்று உபசரித்தான். ''என்னுடனே தங்கி என்னுடைய அவைக்களத்தைச் சிறப்பிக்க வேண்டும்'' என்று அன்புடன் கேட்டுக்கொண்டான். அவனுடன் சில காலம் இருந்த புலவர் அவ்வரசனுடைய நல்ல குணங்களில் ஈடுபட்டார். நாளுக்கு நாள் அவனுடைய அன்பு ஓங்கி வந்தது; அவன் செய்த உபகாரமும் அதிகமாயிற்று. அவனைப் பற்றிக் கவி பாட எண்ணினார் அரிசில்கிழார். அவனுடைய வீரத்தையும் பகைவரோடு போர் செய்து வெற்றி

பெற்றதையும் பத்துப் பாடல்களில் பாடினார்.

அந்தப் பாடல்களைக் கேட்ட சேரன் உள்ளத்தில் நன்றி அறிவு பொங்கியது. எழுத்துக்கு ஆயிரம் பொன் தருவதற்கு ஏற்ற பாடல்கள் அவை என்று தோன்றியது. என்ன பரிசில் தருவது?

அரசன் ஒரு பை நிறையப் பொன்னைக் கொண்டு வரச் செய்தான். அதைப் பரிசாக அளிக்கப் போகிறான் என்று எதிர் பார்த்தார்கள். ஆனால் அரசன் தன் பட்ட மகிஷியை அழைத்துக்கொண்டு அரண்மனைக்கு வெளியே வந்தான். அரிசில் கிழாரையும் அழைத்துக்கொண்டு வந்தான். தன் மனைவியின் கையிலிருந்து வெற்றிலை பாக்கை வாங்கினான். அரிசில்கிழாரிடம் கொடுத்தான். பொன் நிறைந்த பையையும் அளித்துவிட்டுப் பேசலானான்: "புலவர் பெருமானே, தாங்கள் என்னிடம் பூண்டுள்ள கருணையை என்னென்று சொல்வேன்! இந்தச் சிறியேனைத் தங்களுடைய கவிதையால் இறவாதவன் ஆக்கிவிட்டீர்கள். தங்களுக்கு யான் என்ன பரிசிலைக் கொடுப்பேன்? இந்தக் கிழியில் ஒன்பதினாயிரம் பொன் இருக்கிறது. இதுவும் ஒரு பரிசிலா? கடைசியில் ஓர் எண்ணம் எனக்குத் தோன்றியது. இதோ இந்த அரண்மனையையே தங்களுக்கு வழங்கிவிட்டேன்."

உடன் இருந்தவர்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அரிசில் கிழாரும் பிரமித்துப் போனார்.

"அரண்மனை மாத்திரம் அன்று. சிங்காசனமே தங்களுடையதுதான். அரசாட்சியும் தங்களைச்சார்ந்ததே. என்னைப் போன்ற அகங்காரிகள் அரசாட்சி செய்வதனால் போர்தான் மிகுதியாகிறது. அதனால் மக்களுக்குத் துன்பம் உண்டாகிறது. தாங்கள் அரசாண்டால் நாடு முழுவதும் அமைதி உண்டாகும். தங்களுக்குப் பகைவரே உண்டாக மாட்டார்கள்" என்று சொல்லி அவரை வணங்கினான்.

அரிசில்கிழார் சிறிது நேரம் பேசமுடியாமல் திணறினார். பிறகு புன்முறுவல் பூத்தார். "எத்தனையோ அரிய பொருள்களைப்பற்றி நான் கேள்வியுற்றிருக்கிறேன். யானையைக் கொடுத்தவர்கள் உண்டு. நாட்டின் ஒரு பகுதியை அளித்தவர்கள் உண்டு. ஆனால் அரண்மனையையும் அரசாட்சியையும் புலவனுக்கு வழங்கியதாகக் கதையிலும் கேட்டதில்லை. நீ எல்லாக் கொடையாளிகளிலும் உயர்ந்தவன்."

அரசன், "அந்தக் கொடையை ஏற்றுக்கொண்டு என்னைப் பெருமைப் படுத்த வேண்டும்" என்றான்.

அரிசில்கிழார், "ஏற்றுக் கொண்டேன்" என்றார். உடன் இருந்தவர்களுக்கு இரண்டாவது முறையாகப் பிரமிப்புத் தட்டியது. "நான் இப்போது அரசனைப்போல இருந்து கொடுக்க ஆசைப் படுகிறேன். இந்த நாட்டை உனக்கே வழங்குகிறேன்" என்றார்.

"கொடுத்ததை மீட்டும் வாங்குவது நியாயம் அல்லவே!"

"நான் இன்னும் சரியானபடி வாங்கிக் கொள்ளவில்லையே! வாங்கியதாக வைத்துக்கொண்டாலும் என்னுடைய பிரதிநிதியாக இருந்து இந்த நாட்டை ஆளும்படி வேண்டிக் கொள்கிறேன்."

ஓர் இனிய நாடகக் காட்சியைக் காண்பது போல இருந்தது மற்றவர்களுக்கு.

அரிசில்கிழார் வற்புறுத்தினார். அரசன் அவர் வார்த்தையை மறுக்க முடியவில்லை. "ஆனால் ஒரு வரம் அருள வேண்டும். அரசராக இருந்து ஆட்சி புரியாவிட்டாலும் அமைச்சராக இருந்து எனக்குத் துணை புரியவேண்டும். அப்படி இருந்தால் தங்களுடைய அறிவுரையால் நான் திருந்தி நல்ல செயல்களைச் செய்ய முடியும்" என்று அரசன் பணிந்து கெஞ்சிக் கேட்டான்.

அதைப் புறக்கணிக்க அரிசில் கிழார் விரும்பவில்லை. அன்று முதல் அரிசில்கிழார் சேர அரசனுடைய அமைச்சராக இருந்து விளங்கினார். அரசனுக்கு அடங்கிய அமைச்சராக அல்ல; அரசனை அடக்கி அறிவுரை கூறும் நல்லமைச்சராக வாழ்ந்தார்.

புலிக்குட்டி

கதை: ஆர்வி சித்திரம்: ஸாமி

இன்றைக்குச் சுமார் ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்னே பல்லவர்களை வென்று, சோழப் பேரரசை மீண்டும் நிலைநாட்டியவன் ஆதித்த சோழன். காஞ்சிமா நகரில் அபராசிதவர்மனை வென்று அவன் சகோதரியை மணம் செய்து கொண்டிருந்தான். இருந்தாலும் அபராசிதனிடம் ஆதித்தனுக்குப் பயம் இருந்தது. வாள் போரில் வல்லவனான அபராசிதனுக்குச் சிற்றரசர்களிடையே செல்வாக்கு இருந்தது. அவனிடம் இருந்த பழுவூர் நாக்கன் என்ற பல்லவ வீரன் இப்போது ஆதித்தனிடம் படைக்கலக் காவல் புரிந்து வந்தான். அப்போது ஒருநாள் பாசறை முற்றத்தில் அரசனும் நாக்கனும் சந்தித்தார்கள்..

நாக்கா! எங்கே அந்த வாளை இப்படிக் கொடு! நீயும் வேறு ஒன்றை எடுத்துக் கொள், பார்க்கலாம்!
அபராசிதவர்மனின் ஆசான் அல்லவா நீ?
ஹஹ்ஹா! வேறு வாள் தரட்டுமா? அரசே!
சீ! பல்லவ நாயே! இதற்கு ஒரு சிரிப்பா!
தூ

மகா வீரனான நாக்கன் ரோசம் தாளாமல் வஞ்சம் தீர்க்க நல்ல சமயம் பார்த்து வந்தான். கடுமையான மழை பெய்து, பாலாற்றில் பெரு வெள்ளம் போகும் ஒரு நாளில் அரண்மனை உய்யானவனத்தில் தாதி ஒருத்தி ஆதித்தனுடைய நாலு வயதுக் குமாரன் பராந்தகனை வைத்துக் கொண்டு பொழுது போக்குகிறாள். குழந்தை வண்ணத்திப் பூச்சிகளைத் துரத்திக் கொண்டு போகிறான். அங்கே தாதி தன் கணவன் விக்கியைச் சந்திக்கிறாள். நாக்கனும் செடிகளுக்கு மறைவில் அங்கேநிற்கிறான்.

(தொடரும்)

முத்து வீட்டு மோட்டார்

'ஸ்ரீரஞ்சனி'

முத்துவீட்டு மோட்டார் மிகவும்
மோசமான வண்டிதான்!
பத்து கஜம் போகுமுன்னே
படுத்துவிடும் வண்டிதான்! 1

மயிலைக்குக் கிளம்பி விட்டால்
மவுண்ட் ரோடே தாண்டாது.
'கயிலைக்கும் போய் வரலாம்
கனஜோராய்!' என்கிறான். 2

கிளப்புவதோ பெரும்பாடு
கிறு கிறுத்து வந்திடும்.
அளப்பு மட்டும் நிற்க வில்லை
அருமையான வண்டியாம்! 3

நகர வைக்க வேண்டுமானால்
நாலு பேர்கள் வேணுமே
தகர டப்பா போலச்சத்தம்
தலை வலிதான் போங்களேன்! 4

காத தூரம் உள்ள போதே
காதடைக்க வைக்குமே.
பாதசாரி கள் நடுங்கி
பயந்து ஓட வைக்குமே. 5

மோட்டாராம் மோட்டார் இதை
மூலை இரும்புக் கடையிலே
போட்டாலும் தேவலைதான்
போதுமிந்தத் தொல்லையே! 6

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M.

கண்ணன் வெளியீடுகள்

அன்பார்ந்த சகோதரர்களே,
சகோதரிகளே! வணக்கம்.

உங்களுக்கு எல்லாம் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்ல விரும்புகிறோம். அதாவது கண்ணன் பத்திரிகை இருக்கிறதே, அந்தக் கண்ணன் பத்திரிகைக் காரியாலயத்திலிருந்து நம் போன்ற சிறுவர் சிறுமியர் முதல் பதினைந்து பதினாறு வயது வரை ஆனவர்களுக்காக அருமை அருமையான புத்தகங்கள் வெளியிடுகிறார்கள். குறைந்த விலையில், அழகான படங்களோடு, அருமையான புத்தகங்கள் இருக்கின்றன. அறிவு வளர்ச்சிக்கும் ஆசைப் பொழுது போக்குக்கும் ஏற்றபடி பல புத்தகங்களைப் போட்டிருக்கிறார்கள். நீங்கள் அதையெல்லாம் படித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். இதுவரையில் வாங்காதவர்கள் உடனே வாங்கிப் படிக்கலாம். இதுவரையில் 24 புஸ்தகங்கள் வெளிவந்துள்ளன. இன்னும் பல வரப்போகின்றன. ஆயினும் இப்போது கிடைக்கக் கூடியவை:

	ரூ.	அ.
1. சந்திரகிரிக்கோட்டை-ஜனா	1	4
2. அசட்டுப் பிச்சு—ஆர்வி	1	0
3. சின்ன ராஜா—வாசகன்	0	12
4. ஜக்கு — ஆர்வி	0	8
5. ஜம்பு — ஆர்வி	0	8
6. விஞ்ஞானம் பேசுகிறார் பெ. நா. அ.	0	8
7. சமர்த்து மைனா - தி.ஜ.ர.	0	8
8. விளையும் பயிர் - கி.வா.ஜ.	0	8
9. மின்னல் அரக்கன் — ஜனா	0	8
10. ஏரிக்கரை மாளிகை—ஜனா	0	8

	ரூ.	அ
11. குளிகைத் தீவு—ஆர்வி	0	
12. மாஸ்டர் பாலகுமார்—ஆர்வி	0	
13. தூங்கும் அழகி — ஆர்வி	0	
14. நீச்சல் பழக்கம்	0	
15. கோழி விதைத்த நெல்	0	
16. தங்கத்தின் பந்து	0	

தயாராகின்றன:

1. லீடர் மணி
2. பாரஸீக ரோஜா
3. அபாயச் சங்கு

கண்ணன் கழக அங்கத்தினர்களுக்கு 12½% கமிஷன் உண்(

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4